100 Little Stories
for Little Hearts (Vol 4) - TAMIL

லில்லியன் ஸ்டான்லி

குட்டி இதயங்கள் குட்டிக் கதைகள்

100

தொகுப்பு 4

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

குட்டி இதயங்கள் குட்டிக் கதைகள்

(தொகுப்பு 4)

Dr. லில்லியன் ஸ்டான்லி, MBBS, DCH.,

மருத்துவ மிஷனரி

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

8 சர்ச் காலனி, வேலூர் 632 006

தொலைபேசி : 00 91 416 2242943, 2248943

<hq@bymonline.org>

www.bymonline.org

LITTLE STORIES FOR LITTLE HEARTS (Tamil)

(Volume 4)

First Edition : November 2017

Available in English also.

Printed by
SRM Printers,
Vellore

கதைகளின் சாதனை!

இயேசுவானவர் ஒரு தெருப் பிரசங்கியார். அவரைக் கேட்டவர் பொதுவாக சமுதாயத்தின் பெரியவரல்ல, எளிமையானவரே. தமது மனதிலிருப்பதை அவர்களுக்குப் புரிய வைக்கக் கதை சொல்லித் தான் அவர் கற்பிக்க வேண்டியிருந்தது. அவை இருதயத்திலிருந்து இருதயத்திற்குச் சென்றன. சத்தியம் அவர்களது ஆன்மாவிற்குள் வாழைப் பழத்தில் ஊசி போல் இறங்கியது. கல்வியறிவு செய்யக் கூடாததைக் கதைகள் செய்தன.

எனது முதல் மூன்று கதைப் புத்தகங்களும் குட்டிகளால் மட்டுமல்ல பெரியவராலும் பிரசங்கிகளாலும் ஆசை ஆசையாய் வாசிக்கப் படுகின்றன. அவை வாயிலிருந்து வாய்க்கும், ஓய்வுநாள் வகுப்பு களிலும், பள்ளி காலைக் கூடுகைகளிலும், ஆலயங்களிலும், கன்வென் ஷன்களிலும் பயணிக்கின்றன. எல்லா மகிமையும் தேவனுக்கே! அவை பயணிக்கட்டும். எப்படியாவது மக்கள் சத்தியத்தைப் புரிந்து கொண்டால் சரி. சத்தியம் வாழ்க்கைகளை மாற்றட்டும்.

இவை சேகரிக்கப்பட்ட கதைகளே. கதை எழுதி காலத்தை வீணாக்குகிறேனோ என்று நான் கவலைப்படும்போது, “இல்லை, நீங்கள் குட்டி இதயங்களை உருமாற்றுகிறீர்கள்,” என்கின்றனர் மக்கள். அதை நம்பவே விரும்புகிறேன்.

லில்லியன் ஸ்டான்லி
lilianstanley@gmail.com
www.lilianstanley.com

நன்றி!

தட்டச்சு : திருமதி தனித்தா எபிநேசன்
படங்கள் : திரு. ஜேராடன் யனுவேல்

பொருளடக்கம்

1.	நம்பிக்கை, எளிய நம்பிக்கை!	...	09
2.	சரியான காரியம்	...	10
3.	அற்புதப் பரலோகம்	...	11
4.	உன்னால் முடியும்!	...	12
5.	திராட்சை	...	13
6.	நல்லவனுக்கு நல்லவன்	...	14
7.	ததும்பிய டீ கோப்பைகள்	...	15
8.	சிதறடிப்பது ஏன்?	...	16
9.	லஞ்சம்	...	17
10.	ரோஜா	...	18
11.	நன்றியுள்ளம்	...	19
12.	டாக்டர் டேவிட் லிவிங்ஸ்டன்	...	20
13.	அழகி யார்?	...	21
14.	ஒத்துழைப்பு	...	22
15.	எங்கே மகிழ்ச்சி?	...	23
16.	யார் தலைவன்?	...	23
17.	கூரான ஆயுதம்	...	24
18.	யானையின் பெருமை	...	25
19.	இலவசம், இலவசம், இலவசம்!	...	26
20.	யார் தவறு?	...	27
21.	அடடா!	...	28
22.	செய்வதா, செய்யாமலிருப்பதா?	...	29
23.	அழகிய காகம்	...	29
24.	இரட்டை வேடம்	...	30

25.	கடவுளோடு நெருக்கம்	...	31
26.	மூளையைப் பயன்படுத்துங்கள்!	...	31
27.	மரியாதை கொடுத்தால் மரியாதை!	...	32
28.	தலைக்கனம் பிடித்த சேவல்	...	34
29.	உழைப்பே உயர்வு!	...	35
30.	ஆப்பிரிக்க இளவரசி	...	36
31.	தாயின் ஞானம்	...	37
32.	அழகிய ஜாடிகள்	...	38
33.	உங்களை நேசியுங்கள்!	...	39
34.	பரலோகம் எங்கே?	...	40
35.	கொடூரமான போலீஸ்காரர்	...	41
36.	யாருக்கு லாபம்?	...	42
37.	உயிர்காக்கும் இரத்தம்	...	43
38.	முழுமையும் தாண்டுங்கள்!	...	44
39.	மாபெரும் அற்புதம்	...	45
40.	கவனம்	...	46
41.	கொக்கென்று நினைத்தாயோ?	...	47
42.	மூட நம்பிக்கை	...	48
43.	வாணியும் வீணையும்	...	49
44.	ஓநாயும் ஆட்டுக்குட்டியும்	...	51
45.	அப்பா சென்ற பரதீசு	...	52
46.	பாரம்	...	53
47.	குழாயை அடைத்தது என்ன?	...	54
48.	மாற்றம்	...	55
49.	KFC	...	57

50.	போராயுதங்கள்	...	58
51.	ஆசீர்வாதமான விபத்து	...	58
52.	குற்றம்	...	60
53.	பெரியவரும் சிறியவரும்	...	61
54.	வெட்டுக்கிளியும் எறும்பும்	...	62
55.	நிமிடங்களை எண்ணுங்கள்!	...	63
56.	வெற்றியின் இரகசியம்	...	64
57.	எந்த வேலையும் என் வேலைதான்!	...	65
58.	டாக்டர் ஜீகைலும் திரு. ஹைடும்	...	66
59.	பூனையும் யானையும்	...	67
60.	வசனத்தின் வல்லமை	...	68
61.	ஷாஜஹானின் யுக்தி	...	69
62.	வலிக்கும் அடிகள்	...	70
63.	இலவசங்கள்	...	71
64.	விநோதத் திருட்டு	...	72
65.	நாறின மல்லிகை	...	73
66.	யானையும் எறும்பும்	...	74
67.	தங்க பிஸ்கெட்	...	75
68.	விதையும் மரமும்	...	76
69.	மனமகிழ்ந்த பெருவிரல்	...	77
70.	ஒவ்வொரு நாளாக ...	...	78
71.	புத்தியற்ற அரசன்	...	79
72.	பிங்கோ	...	79
73.	எறும்புப் புற்று	...	80
74.	கிட்டார் படிப்பு	...	81
75.	வாயாடி ஆமை	...	82

76. தவளையும் வண்ணத்துப்பூச்சியும் ... 83
77. பறக்கும் யானை ... 84
78. மரமும் புல்லும் ... 84
79. பேராசை பிடித்த பசு ... 86
80. பலம் ... 86
81. நண்டு ... 87
82. பேராசை கொண்ட கருமி ... 87
83. மந்திரப் பந்து ... 88
84. முட்செடியும் ஆலமரமும் ... 89
85. பெருமை கொண்ட பேனா ... 90
86. பேனாவும் பென்சிலும் ... 90
87. பன்றியும் ஆடும் ... 91
88. கரப்பான்கள் ... 92
89. காகங்களும் புறாவும் ... 93
90. மரங்களும் சிங்கங்களும் ... 94
91. செல்ல ஆட்டுக்குட்டி ... 95
92. ஒரு சிறு மீன் ... 96
93. பனித்துளிகள் ... 97
94. அரசனின் வால் ... 98
95. பொன் வீடு ... 99
96. உண்மை நண்பன் ... 100
97. ரயில் பெட்டியில் பாம்பு ... 101
98. தண்ணீரும் வெந்நீரும் ... 102
99. கருமி ... 103
100. அயலாரை ஆசீர்வதியுங்கள்! ... 104

1

நம்பிக்கை, எளிய நம்பிக்கை!

படைத்தலைவன் ஒருவனுக்குத் தொழுநோய் வந்தது. அந் நாட்களில் தொழுநோய்க்கு மருந்து கிடையாது. மனம் நொந்து போனார்

அவர். அண்டை நாட்டுக் குரு ஒருவர் தொழுநோயைக் குண மாக்க வல்லவர் என்று கேள்விப் பட்டார். ஆகவே அவர் குதிரை வண்டிகளில் குருவுக்கு வெகுமா னங்கள் பல ஏற்றிக்கொண்டு பரிவாரத்தோடு சென்றார். குரு தனது நாடியைப் பார்த்து, கண் களையும் நாக்கையும் பரிசோ தித்துப் பின்பு பல மருந்துகள் எழுதிக் கொடுப்பார் என்று நினைத் திருந்தார்.

ஆனால் குருவின் வீட்டைச் சென்றடைந்தபோது, ஒரு வேலைக் காரன் வெளியே வந்து, படைத்தலைவன் ஏழுமுறை யோர்தான் நதியில் மூழ்கி எழவேண்டுமென்று குரு சொன்னதாகக் கூறினான். "என்னுடைய நாட்டில், குளிப்பதற்கு இதைவிடச் சிறந்த நதிகள் உண்டு," என்று சொல்லி, படைத்தலைவன் கோபத்தோடு திரும்பிச் செல்லப் புறப்பட்டான். ஆனால் அவரது வேலைக்காரனோ, "ஐயா, கடினமான காரியமொன்றைச் செய்யச் சொல்லி குரு பணித்தி ருப்பாரானால் செய்திருப்பீர் அல்லவா?" என்றான். ஆகவே படைத் தலைவன் சரி என்று ஆற்றில் இறங்கினான். ஏழாவது முறை அவன் மூழ்கி வெளியே வரும்போது, தொழுநோய் நீங்கிப் பூரண சுகமானான். அவனைக் குணமாக்கியது நம்பிக்கையே.

இந்த உலகத்தில் ஒரு மனிதனாகப் பிறந்து, சுமார் முப்பத்தி மூன்றரை ஆண்டுகள் வாழ்ந்து, சிலுவையில் அறையப்பட்டு, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து, பரலோகத்திற்குச் சென்று, மறுபடி ஒரு நாள் உலகிற்கு வந்து, தம்மை நம்புகிறவர்களை மோட்சத்திற்கு அழைத்துச் செல்லவிருக்கிற இயேசு கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைத்தால்

நித்திய வாழ்வு அருளுவதாகக் கடவுள் வாக்களித்திருக்கிறார். எத்தனை எளிமை! நமது இரட்சிப்பிற்காக நாம் கடினமாக உழைக்கத் தேவையில்லை. இயேசுவை நம்பினால் போதும்.

பரலோகம் செல்லக் கட்டணம் கிடையாது. இயேசுவை நம்புவதே இலவசப் பயணச்சீட்டு!

2

சரியான காரியம்

கோபு ஒரு பாலைவனம் வழியாகச் சென்றுகொண்டிருந்தார். தாகமெடுத்தது. 'அங்கே ஒரு குடிசைக்கு முன்பாக அடிகுழாயும் ஒரு குவளை தண்ணீரும் இருந்தது. அங்கே ஒரு பலகையில் "குவளைத் தண்ணீரை குழாயில் ஊற்றியபின் குழாயை அடித்து தண்ணீர் எடுக்கவும். பின்பு குவளையில் தண்ணீர் நிரப்பி வைத்து விட்டுச் செல்லவும்," என்று எழுதப்பட்டிருந்தது.

குழாயில் துருப்பிடித்திருந்தது. இது வேலை செய்யுமா? கோபுவுக்குச் சந்தேகம். தண்ணீரை ஊற்றியபின் குழாய் வேலை செய்யாவிட்டால் குடிக்க நீர் கிடையாதே. துணிந்து செய்வதைவிடத் தண்ணீரைக் குடிப்பது மேலல்லவா? கோபு யோசித்தார். "இந்தத் தண்ணீரை நான் குடிப்பேனானால் அடுத்து வருபவருக்கு நீர் கிடையாதே. இந்தப் பாலைவனத்தில் சாகும் தருவாயில் நான் இருப்பது போல அவரும் சாகலாமே."

சீக்கிரமாய் கோபு தண்ணீரை குழாயில் ஊற்றி அடிக்கத் துவங்கினார். நீர் வந்தது. தாகம் தீர்த்து, முகம் கழுவிப் புத்துணர்வு பெற்றார். குவளையை நிரப்பி வைத்துவிட்டு, சரியானதைச் செய்தோம் என்ற மன நிம்மதியோடு பயணத்தைத் தொடர்ந்தார்.

என்ன செய்யவேண்டும் என்று தெரியாத கட்டத்தில், சரியான காரியம் என்று உங்களுக்குத் தோன்றுவதைச் செய்யுங்கள்! அப்படியானால் உங்கள் மனம் நிம்மதியாக இருக்கும்.

3

அற்புதப் பரலோகம்

இரண்டே வயதாயிருக்கும்போது மின்னி பார்வை இழந்தாள். தாய் கூடவேயிருந்து இவ்வழகிய உலகையும் வண்ண வண்ண ரோஜாக்களையும் பசுமையான இலைகளையும் நீல வானத்தையும் வர்ணிப்பாள்.

அவளுக்குப் பத்து வயதான போது கண் மருத்துவர் ஒருவர், ஓர் அறுவை சிகிச்சை செய்து முயற்சி செய்யலாம் என்றார். சிகிச்சை வெற்றிகரமாய் முடிந்தது. தோட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு மின்னியின் கண் கட்டுகள் அவிழ்க்கப்பட்டன. தன்னைச் சூழ்ந்திருந்த பலவர்ண உலகைக் கண்டு மின்னி மகிழ்ச்சியினால் கூவினாள். “அம்மா, நீங்கள் சொன்னதைவிட இது கோடி கோடி மடங்கு அழகு, அம்மா,” என்றாள்.

ஆம், திருத்தூதுவன் யோவான் தனக்குத் தெரிந்த வார்த்தைகளில் பரலோகத்தை விவரித்து வேதத்தில் எழுதியுள்ளார். ஆனால் நாம் பரலோகத்திற்குப் போகும்போது, நாம் கண்டதையும் கேட்டதையும்விட அது பத்தாயிரம் மடங்கு பத்தாயிரத்திலும் அதிகச் சிறப்பாயிருக்கும்.

4

உன்னால் முடியும்!

கோபால் பிறந்தபோது அவனது கால்கள் இரண்டும் வளர்ச்சி அடையாமல் இருந்ததைக் கண்டு பெற்றோர் அதிர்ச்சியுற்று அழுதனர். ஆனால் அந்தப் பிள்ளையை அன்போடும் பரிவோடும் வளர்க்கத் தீர்மானித்தனர். கோபால் வளர்ந்து அழகிய புத்திசாலிப் பிள்ளை யானான். அவனது தகப்பனார் அவனை சைக்கிளில் பள்ளிக்குக் கொண்டு சென்று அவனது இருக்கையில் தூக்கி வைப்பார். ஆசிரியர் சொல்வதைக் கோபால் கவனித்துக் கேட்பான். பிள்ளைகள் மைதானத்தில் விளையாடுவதைக் கண்டு கையசைத்துச் சிரிப்பான். சில கொடுமையானப் பிள்ளைகள் சிலவேளை அவனைக் கேலிசெய்து சிரிப்பர். கோபாலின் கண்கள் நிறையும். பள்ளியில் நடந்தவற்றை எல்லாம் பெற்றோரிடம் சொல்லுவான். சுயபரிதாபத்திற்கு இடங்கொடுத்துவிடக்கூடாதென்று பெற்றோர் அவனை ஆறுதல்படுத்தி படிப்பில் கவனம் செலுத்த ஊக்குவிப்பர்.

அவனது வீட்டிற்கு எதிரில் உள்ளவன் ரஞ்சன். அவன் ஐந்து வயதில் இளம்பிள்ளை வாதத்தினால் (போலியோ) பாதிக்கப்பட்டவன். பள்ளியில் பிள்ளைகள் அவனை நொண்டி, நொண்டி என்று அழைத்து கேலி செய்வர். ஆகவே பள்ளிக்குப் போக மறுத்துவிட்டான். தனக்காகத் தானே பரிதாபப்பட்டு அழுவான். வளர வளர அவன் வீட்டிலேயே உட்கார்ந்திருக்க வேண்டியதாயிற்று. ஆகவே அவனது பெற்றோர் அவனுக்கு வீட்டிலேயே ஒரு பெட்டிக் கடை வைத்துக் கொடுத்தனர்.

கோபால் திறம்படப் படித்து IAS தேர்ச்சி பெற்று கலெக்டரானான். அவன் ஓட்டும்படியான சிறப்பு வசதிக் காரும் ஒரு சக்கர நாற்காலியும் கொடுக்கப் பெற்றான். தன் நண்பன் ரஞ்சனை அவன் மறக்கவேயில்லை. அடிக்கடி பெட்டிக்கடையில் நின்று விசாரித்துவிட்டுச் செல்வான். வாழ்க்கையில் சாதனை படைத்த கோபாலின் கதை TVஇல் படமாக வெளியானது. ரஞ்சன் தனது வாழ்க்கையை நினைத்து நொந்து கொண்டான்.

வாழ்க்கையில் என்னதான் குறையிருந்தாலும் அதைக் கடின உழைப்பினாலும் மனவுறுதியினாலும் மேற்கொள்ளலாம். வாழ்க்கையில் சோர்படையாமல் முன்னேற வேண்டும்.

5

திராட்சை

திராட்சைக் குலை ஒன்று திராட்சைத் தோட்டத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. தோட்டச் சொந்தக்காரர் ஒரு நாள் பார்வையிட வந்து அதைத் தடவிக் கொடுத்தார். குலை சந்தோஷமடைந்தது. பூச்சிகள் குலையைக் கெடுக்காதபடி மருந்து தெளிக்கச் சொந்தக்காரர் தோட்டக்காரனுக்குக் கட்டளை கொடுத்துச் சென்றார். திராட்சைக் கொடியைச் சுற்றிக் கொத்தி உரமிடச் சொன்னார். "நமது ஐயா எவ்வளவு நல்லவர்," என்றன திராட்சைகள்.

தோட்டத்தில் குலை பெருமையோடு தொங்கியது. அதன் நிறம் கருஞ்சிவப்பாகி இனிப்பு கொடுத்தது. ஒரு நாள் வேலையாட்கள் வந்து அதைப் பறித்துத் தண்ணீரில் போட்டனர். பறித்தது வேதனை அளித்தாலும் தண்ணீரின் குழுமை சுகமாயிருந்தது. வேலையாட்கள் பழங்களைக் கழுவித் தொட்டியில் போட்டனர். பின்புதான் சித்ரவதை

ஆரம்பித்தது. ஆட்கள் தொட்டியில் இறங்கித் திராட்சைகளை மிதிக்கத் துவங்கினர். அவர்கள் மிதித்து நசுக்கியதில் திராட்சைகளின் சாறு ஓடி ஒரு பெரிய பாத்திரத்தில் சேர்ந்தது. வேதனை தாங்க முடியாமல் திராட்சைகள் அலறித் துடித்தன. "நமது ஐயா கொடூரர். இருதயமில்லாதவர்," என்றன. தொடர்ந்து அவை பதப்படுத்தப்பட்டன.

இறுதியாக அவை புட்டிகளில் அடைக்கப்பட்டு திராட்சை ரசமாயின. மக்கள் அதைப் பருகி, "ஆஹா, எங்கே இத்தனை இனிப்பான திராட்சை கிடைக்கிறது?" என்றுப் புகழ்ந்தனர். திராட்சை களுக்கு குஷி தாங்கமுடியவில்லை. "திராட்சைச் செடியிலேயே தொங்கியிருந்தால் அழுகி வீணாய்ப் போயிருப்போம். நமது ஐயா நல்ல யோசனை செய்தார். இப்போது அநேகருக்குப் பயனும் ஆசீர்வாத முமானோம்," என்று திராட்சைகள் அகமகிழ்ந்தன.

நாம் தன்னலமுள்ளவர்களாய் இருக்கும்வரை பிறருக்கு ஆசீர்வா தமாக முடியாது. கடினமான, வேதனை தரும் பயிற்சி பெறுவதற்கு ஆண்டவரது கையில் நம்மை ஒப்புக்கொடுப்போமானால் அவர் நம்மைப் பலருக்கு ஆசீர்வாதமாக மாற்றுவார்.

6

நல்லவனுக்கு நல்லவன்

முதியவர் ஒருவர் ஊர் வாசலில் உட்கார்ந்திருப்பார். ஊருக்குள் நுழையும் புதியவர்கள், "இவ்வூர் மக்கள் நல்லவர்களா கெட்டவர்களா?" என்று கேட்பர். அதற்கு முதியவர், "உங்கள் ஊர் மக்கள் எப்படி, நல்லவர்களா கெட்டவர்களா?" என்று கேட்பார். "எங்கள் மக்கள் நல்லவர்கள்," என்று விடை வருமானால், முதியவர், "இவ்வூர் மக்கள் மிக நல்லவர்கள், நீங்கள் தைரியமாகப் போகலாம். உங்களை நன்றாகப் பராமரிப்பர்," என்பார். "எங்கள் ஊர் மக்கள் கெட்டவர்கள்," என்று பதில்

வருமானால், “இவ்வூர் மக்கள் மோசமானவர்கள். உங்களைக் கேவலமாக நடத்துவர்,” என்பார் முதியவர்.

இதைக் கவனித்த ஒருவர், “ஐயா, ஏன் இப்படிப் பதிலளிக்கிறீர்கள்?” என்று வினவினார். முதியவர் பதிலளித்தார், “நீங்கள் நல்லவர்களாயிருந்தால் மக்கள் உங்களிடம் நன்றாக நடந்து கொள்வர். நீங்கள் கெட்டவர்களாக இருந்தால் மக்கள் உங்களிடம் பொல்லாதவர்களாக நடந்து கொள்வர்.”

மற்றவர்கள் உங்களை நன்றாக நடத்தவேண்டும் என்று விரும்புவீர்களானால் நல்லவர்களாக நடந்துகொள்ளுங்கள்.

7

ததும்பிய டீ கோப்பைகள்

வாலிபன் ஒருவன் ஹட்சன் டெய்லரைச் சந்தித்து தான் சீனாவிற்கு மிஷனரியாகப் போகப் போவதாகக் கூறினான். டீ கோப்பைகள் வைக்கப்பட்டிருந்த சிறியதொரு மரமேசையில் அவர்கள் எதிருக்கெதிராக அமர்ந்திருந்தனர். திடீரென்று ஹட்சன் மேசையைத் தம் கைகளால் குத்தத் துவங்கிய போது டீ கோப்பைகள் துள்ளித் ததும்பி டீயைச் சிந்தின. வாலிபன் ஒன்றும் புரியாமல் திகைத்தபோது ஹட்சன் விளக்கினார், “அங்கே நீ சிக்கல்களையும், சோதனைகளையும், கஷ்டங்களையும், கடினங்களையும் உள்ளம் உடைதலையும் சந்திக்கவேண்டி வரும். உனக்குள்



இருப்பதே அப்போது வெளியே வரும் என்பதை இந்த டீ கோப்பைகள் நினைவூட்டட்டும்."

ஆம், வாழ்வின் பல சூழ்நிலைகளைச் சந்திக்கும்போது உமக்குள் ளிருப்பதைத்தான் வெளியே கொட்டுவீர்கள். நீங்கள் கோபத்தாலும் பகைமையாலும் நிறைந்திருப்பீர்களானால் அவற்றைத்தான் வெளியே கொட்டுவீர்கள். அன்பினாலும் கடவுள்மேல் நம்பிக்கையினாலும் நிறைந்திருப்பீர்களானால் நல்ல மனிதராய்ப் பண்போடு அமரிக் கையாய் நடந்துகொள்வீர்கள்.

8

சிதறடிப்பது ஏன்?

குரு ஒருவர் தம் சீடருடன் பயணித்துக் கொண்டிருந்தார். சாயங்காலம் ஒரு கிராமத்தை அடைந்தனர். கிராமத்தினரிடம் உணவும் போர்வைகளும் வேண்டினர். கிராமத்தினரோ அவர்களுக்கு உதவ வில்லை. பசியிலும் குளி ரிலும் குழுவினர் சிரமப் பட்டனர். காலையில் புறப் பட்டபோது குருவானவர், "ஆண்டவரே இம்மக்களை ஆசீர்வதியும். இவர்கள் இங் கேயே எப்பொழுதும் வச தியாக வாழட்டும்," என்று ஜெபித்தார்.

மறுநாள் சாயங்காலம் வேறொரு கிராமத்தை அடைந்தனர். அக்கிராமத்தினர் அவர்களை வரவேற்று அன்புடன் உணவும் உறைவிடமும் அளித்தனர். மறு காலை அவர்கள் புறப்பட்டபோது குருவானவர், "ஆண்டவரே, இம்மக்களைச் சிதறடியும். உலகெங்கும் இவர்கள் சிதறடிக்கப்படுவார்களாக," என்று ஜெபித்தார்.

இந்த விநோத ஜெபங்களைக் கேட்டு அதிசயித்த சீடர்கள், காரணத்தைக் குருவிடம் வினவினர். குரு விளக்கியது, "கெட்டவர்கள் மற்றவர்களைப் பாதிக்கக்கூடாது. நல்லவர்கள் எங்கும் சென்று மற்றவர்களை நல்ல விதத்தில் பாதிக்கவேண்டும். நீங்கள் நல்லவர்களோ கெட்டவர்களோ, மக்கள் உங்கள் பண்புகளைப் பிடித்துக் கொள்வர்."

இயேசு நம்மை உலகமெங்கும் போகச் சொன்னார். நீங்கள் பெரியவர்களானபின் தீயோர் வாழும் இடங்களைத் தெரிந்து கொண்டு, தீய சமுதாயத்தை மாற்ற முற்பட வேண்டும்.

9

லஞ்சம்

அன்று சனிக்கிழமை ஆனதால் சீனிவாசன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தான். அம்மா கொஞ்சம் தக்காளி வாங்கி வரச் சொன்னார்கள். சீனிவாசன் முகத்தைச் சுளித்தான். அம்மா கெஞ்சியவுடன், "சரி, சரி, அப்போ எனக்கு ஒரு சாக்லேட் வாங்கிக் கொள்வேன்," என்றான். அம்மாவும் வேறு வழியில்லாமல், "சரி, சரி, ஓடு," என்றார்கள்.

சாயங்காலம் அலுவலகத்திலிருந்து வீடு வந்த அப்பா, "அலுவலகத்தில் திடீர் சோதனை நடந்ததால் பிந்திவிட்டது," என்றார். "என்னாச்சு?" என்று அம்மா கேட்க, "எங்கள் மேலாளர் லஞ்சம் வாங்கியதால் போலீஸ் அவரைப் பிடித்தனர்," என்று பதிலுரைத்தார் அப்பா.

"லஞ்சம் என்றால் என்ன?" என்று கேட்டான் சீனி. அப்பா விளக்கினார்: "நாம் செய்யும் வேலைக்கு அரசாங்கம் சம்பளம்

கொடுக்கிறது. அது போக நாம் சேவை செய்வோரிடம் பணம் வாங்கினால் அது லஞ்சம்."

"நான் உன்னைக் கடைக்கு அனுப்பும்போது, சாக்லேட் வாங்கிக் கொள்ள அனுமதித்தால்தான் போவேன் என்றாயல்லவா, அதுதான் லஞ்சம்," என்றார்கள் அம்மா. "சாரி மம்மி," என்றான் சீனி. "அச்சா பேட்டா," என்றார்கள் அம்மா.

10

ரோஜா

ரோஜாப்பூ என்றால் ரோஜாலிக்குக் கொள்ளை ஆசை. ஆகவே அம்மா ஒரு ரோஜாச் செடி அன்பளித்தார்கள். ரோஜாலி தினமும் ஆசை ஆசையாய்ப் பூக்களைச் சூடி பள்ளி செல்வதோடு தன் சிநேகிதி களுக்கும் ஆசிரியைகளுக்கும் கொடுப்பாள். அம்மா தினமும் அதற்குத் தண்ணீர் ஊற்றுவார்கள்.

ஒரு நாள் ரோஜாலி பூ பறிக்கும்போது செடி அவளிடம் பேசத் தொடங்கியது. "தினமும் நான் உனக்கு மலர்களைத் தருகிறேனே, ரோஜாலி, நீ அதற்குப் பதிலாக என்ன எனக்குத் தருகிறாய்?" ரோஜாலி அதிர்ந்து போனாள். செடிக்கு ரோஜாலி எதுவுமே தரவில்லை. "தினமும் அம்மா தானே தண்ணீர் ஊற்றுகிறார்கள். அதை நீ செய்தாலென்ன? எனக்கும் சந்தோஷமாயி ருக்கும், அம்மாவுக்கும் பளு குறையும்," என்றது செடி.

"நல்ல ஐடியா," என்று சிந்தித்த ரோஜாலி அடுத்த நாள் வாளியில் தண்ணீர் மொண்டு செடிக்கு ஊற்றினாள். அம்மா அவளுக்கு முத்தமிட்டு, "நன்றி, செல்லமே," என்றார்கள்.

வீட்டில் உதவி செய்வது பெற்றோர்க்குப் பெரு மகிழ்ச்சி அளிக்கும்.

11

நன்றியுள்ளம்

திருமண விருந்திற்குப் பிறகு குடும்பத்தில் ஐவரும் வாந்தி வயிற்றுவலியோடு மருத்துவரைப் பார்க்கச் சென்றார்கள். அவர்கள் நிலைமையைக் கண்ட மருத்துவர் கவலையுற்றார். ஐவருக்கும் ஊசி போட்டு, சாயங்காலம் வரை மருத்துவமனையிலேயே இருக்கும்படி கூறினார். சாயங்காலத்துக்குள் ஐவரும் சுகமாயினர். "ஐயா, ஐந்து பேருக்கு ஊசி போட்டு, ஐந்து ஊசிக்கும் பணம் கேட்கிறீர்களே. கொஞ்சம் சலுகை காட்டக் கூடாதா?" என்றார் அப்பா. அம்மா, "டாக்டர், ஊசி சரியான வலி," என்றார்கள். மூத்த மகன், "சார், உங்கள் மருத்துவமனை படுக்கைகள் வசதியேயில்லை," என்றான். அவனது தங்கை பேச வெட்கி வாயடைத்து நின்றாள். சிறுவன் ராஜேஷ் மலர்ந்த முகத்துடன், "டாக்டர் அங்கிள், ரொம்ப வயித்து வலி, வாந்தியோடு வந்தேன். இப்போ எல்லாம் நல்லாப் போச்சு. தாங்க்யூ டாக்டர் அங்கிள்," என்றான். மருத்துவர் புன்னகை ஒன்றை உதிர்ந்துவிட்டுச் சொன்னார், "நீ ஒருத்தன்தான் நன்றி சொன்னாய். கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக."

கடவுளோ மனிதரோ நமக்குச் செய்யும் உதவிகளுக்கு நன்றி சொல்ல மறந்து போகிறோம் அல்லவா? முறுமுறுப்பதைத் தவிர்த்து நன்றி சொல்லத் தீர்மானிப்போமா?

12

டாக்டர் டேவிட் லிவிங்ஸ்டன்

ஓர் எளிய ஸ்காட்லாந்து குடும்பத்தில் பிறந்தவர் லிவிங்ஸ்டன். அந்நாட்களில் இலவசக் கல்வி இல்லாததால், 10 வயதிலேயே அவர் ஓர் ஆலையில் சேர்ந்து நாளுக்கு 14 மணி நேரம் உழைத்தார். ஓய்வு நேரங்களில் படிப்பார். தனது 27ஆம் வயதில் மருத்து வப்பட்டம் பெற்றார்.



இயேசு கிறிஸ்துவை பல இடங்களில் அறிவிப்பவர்கள் மிஷனரிகள் எனப்படுவர். அவர்கள் மக்களுக்கு கல்வி அறிவைப் புகட்டி மருத்துவ உதவியும் செய்வார்கள். டாக்டர் டேவிட் லிவிங்ஸ்டன் மிஷனரியாக விரும்பினார். அவ்வமயம் டாக்டர் மொஃபட் என்பவர் தென் ஆப்பிரிக்காவில் மிஷனரியாக இருந்தார். அவர் லிவிங்ஸ்டனை ஆப்பிரிக்காவிற்கு அழைத்தார்.

கருப்பர்களை அந்நாட்களில் ஆப்பிரிக்காவிலிருந்த வெள்ளையர்கள் அடிமைகளாக நடத்தினர். லிவிங்ஸ்டன் அங்கு சென்றபோது அடிமை வியாபாரத்திற்கு எதிராகப் போர் தொடுத்தார். தன் வாழ்க்கை எல்லாம் கருப்பர்களுக்காகவே செலவிட வாஞ்சித்தார். ஆகவே பல்வேறு ஆப்பிரிக்க மொழிகளைக் கற்றார். 1844இல் டாக்டர் மொஃபட்டின் மகள் மேரியை மணந்தார்.

1849இல் லிவிங்ஸ்டன் கலஹாரி பாலைவனத்தைக் கடந்து ஆபத்தான பாதைகளில் பயணித்தார். சாலைகள் கிடையாது. ஆபத்தான காடுகள், முதலைகள் நிறைந்த ஆறுகள், ஏரிகள் மற்றும் சதுப்பு நிலங்களைக் கடந்து சென்றார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு சாம்பசி ஆற்றையும் விக்டோரியா நீர்வீழ்ச்சியையும் அடைந்தார். மத்திய ஆப்பிரிக்காவைச் சென்றடைந்த முதல் மிஷனரி இவரே. தனது

பயணங்கள், தாம் கண்ட தாவரங்கள் மற்றும் பூச்சிகளைக் குறித்து விரிவான நாட்குறிப்பேடு எழுதினார். தான் கண்டுபிடித்த இடங்களின் வரைபடத்தை வரைந்தார். அவர் சென்ற இடங்களில் எல்லாம் ஆப்பிரிக்கரின் துன்பங்களைக் கண்டு அவர்களுக்கு சிகிச்சை அளித்தார். அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விரும்பினார்.

1865இல் அவரது மனைவியார் இறந்து போனார். ஆப்பிரிக்காவின் தட்பவெட்ப நிலையும் பயணங்களும் லிவிங்ஸ்டனது உடல்நலத்தை வெகுவாய்ப் பாதித்தன. ஆனாலும் ஏழைகளுக்கு உதவுவதை அவர் விடவேயில்லை. மக்கள் அவரை நேசித்தனர். 1873இல் இறந்து போனார். ஓராண்டு கழித்து இங்கிலாந்திற்குச் செய்தி வந்தது. ஆப்பிரிக்கர் அவரது உடலைப் பதப்படுத்தி இங்கிலாந்து அனுப்பி வைத்தனர். அவர் வெஸ்ட் மின்ஸ்டர் அபேயில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

பல மிஷனரிகள் ஆப்பிரிக்கா செல்ல வழிவகுத்தவர் டேவிட். இன்று ஆப்பிரிக்கா முன்னேறிய நாடு என்றால் அதற்குக் காரணம் இவரே. நாமும் நமது வாழ்க்கையை ஏழைகளுக்கும் நசுக்கப்பட்ட வர்களுக்கும் அர்ப்பணித்த டாக்டர் டேவிட் லிவிங்ஸ்டனின் அடிச் சுவடுகளில் நடப்போம்.

13

அழகி யார்?



அன்னப் பட்சியைக் காணும் வரை ஒரு காகம் மகிழ்ச்சியாக இருந்தது. "அன்னம் எத்தனை அழகு! உலகிலேயே மகிழ்ச்சியான பறவை அதுவாகத்தான் இருக்கும். நான் எத்தனை அசிங்கம்," என்று நினைத்தது. காகம் அன்னத்தைக் கேட்டது, "உன் அழகைக் குறித்து உனக்கு அதிக சந்தோஷமா?" அன்னம் இழுத்தது, "சந்தோஷம்தான். ஆனால் கிளியைப் பார், பச்சை

உடலும் சிவப்பு மூக்கும்! அப்பப்பா, எத்தனை அழகு!" ஆகவே இருவரும் கிளியிடம் சென்றனர். கிளி "சரிதான். மயிலைப் பாருங்கள். எனக்கு இரண்டே நிறம்தான். மயிலுக்கு எத்தனை நிறங்கள்! அதுபோல் வருமா!" என்றது. ஆக மூவரும் மிருகக்காட்சி சாலைக்குச் சென்று மயிலிடம் தங்கள் எண்ணத்தைக் கூறினர். மயிலின் கண்களிலிருந்து கண்ணீர் துளிகள் விழுந்து சிதறின. "உங்களைப் பார்த்தால் எனக்கு எத்தனைப் பொறாமை தெரியுமா? சுதந்திரப் பறவைகளாய்ச் சுற்றித் திரிகிறீர்களே. கூட்டுக்குள் இருப்பவர்க்கு அழகு இருந்தென்ன!" என்றது மயில்.

பாடம் படித்துக்கொண்ட மூவரும் கடவுள் தங்களைப் படைத்த விதத்தில் திருப்தியாயிருக்கத் தீர்மானித்து சமாதானத்தோடு வீடு திரும்பினர்.

நீங்கள் கடவுளின் அற்புதப் படைப்புகள், நீங்கள் இருக்கும் நிலையில் மகிழ்ச்சியாய் இருங்கள். யாரோடும் உங்களை ஒப்பிடாதீர்கள்.

14

ஒத்துழைப்பு

இரண்டு நரிகள் ஒரு காட்டைச் சுற்றி வந்தன. அங்கே குலைகள் நிறைந்த ஒரு திராட்சைச் செடியைக் கண்டன. அவை குதித்துக் குதித்துப் பார்த்தும் கனிகள் எட்டவில்லை. அவைகளுக்கு ஒரு யுக்தி தோன்றியது. ஒரு நரி குலையின் கீழ் நிற்க மற்றொன்று அதன் முதுகின்மேல் ஏறி கனியைத் தின்றது. இவ்வாறாக மாறி மாறி கனி தின்று திருப்தி அடைந்தன.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!

15

எங்கே மகிழ்ச்சி?

அந்த அறையில் சுமார் 100 பேர் இருந்தனர். ஆளுக்கொரு பலூன்

கொடுக்கப்பட்டு, அதை ஊதி தங்கள் பெயரை அதில் எழுதும்படி கூறப்பட்டனர். பின்பு பலூன்கள் அடுத்த அறையில் போடப்பட்டன. இப்போது யாவரும் அடுத்த அறைக்குச் சென்று ஐந்தே நிமிடங்களில் தங்கள் பலூனைக் கண்டுபிடித்துக் கொண்டுவரும்படி கேட்கப்பட்டனர். ஐந்து நிமிடம் கழித்து யாவரும் வெறுங்கையோடு வெளியே வந்தனர்.

இப்போது மறுபடியும் அறைக்குள் சென்று யாதாமொரு பலூனை எடுத்து, அதன் சொந்தக்காரரிடம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப் பட்டனர். ஐந்து நிமிடத்தில் வேலை முடிந்தது.

நாமெல்லாருமே மகிழ்ச்சியைத் தேடுகிறோம். தன்னலத்தில் இல்லை மகிழ்ச்சி; பிறருக்கு உதவுவதில்தான் இருக்கிறது.

16

யார் தலைவன்?

சிங்கம் ஒன்று ஒரு குகையில் வசித்து வந்தது. கரடி அதற்கு மந்திரியாகவும் புலி ஆலோசகராகவும் இருந்தன. ஒருநாள் சிங்கம் "கரடியும் புலியும் என்னை மதிக்கிறார்கள். மற்ற மிருகங்களும் என்னை மதிக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்," என்றது. ஆகவே

சிங்கம் குகையை விட்டு வெளியேறிக் காட்டை வலம் வந்து கொர்ஜித்தது. முயல்களும் மான்களும் காட்டெருமைகளும் நரிகளும் நடுங்கிச் சிதறின. சிங்கம் குகைக்குத் திரும்பி வந்து தன் மந்திரியிடமும் ஆலோசகரிடமும் நடந்ததைச் சொன்னது. அவைகள் சிங்கத்திடம், "கனத்துக்குரிய அரசே, இது மரியாதையல்ல. இது பயம். நீங்கள் எல்லா மிருகங்களையும் நேசித்து அரவணைத்துக் கொள்வீர்களானால் அவை உம்மை நெருங்கி வரும். அதுவே தலைமைத்துவம்," என்றன.

சில சமயம் நாம் மக்களை நோக்கிச் சத்தம் போட்டு கட்டளை கொடுக்கும்போது நாம் மதிக்கப்படுவதாக நினைக்கிறோம். இல்லை, மற்றவர்களை மதிக்கும்போதுதான் நாம் மதிக்கப்படுகிறோம்.

17

கூரான ஆயுதம்

ஒரு மனிதனுக்குத் தென்னந்தோப்பு இருந்தது. அதை அவன் விரிவுபடுத்த விரும்பினான். ஆகவே இன்னும் நூறு தென்னங் கன்றுகள் நடும்படி தன் தோட்டக்காரரிடம் கூறி அதற்குக் கூடுதல் சம்பளம் தருவதாக வாக்களித்தார். தோட்டக்காரர் மகளுக்குத் திருமணம் ஒழுங்காகி இருந்ததால் அதற்குத் தேவையான பணம் கிடைக்குமே என்று அவருக்கு மகிழ்ச்சி.

முதல் நாளில் 40 கன்றுகள் நட்ட அவர், திருமணத்திற்குமுன் வேலையை முடித்து பணத்தைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தார். ஆனால் அடுத்த நாள் இருபதுதான் நட முடிந்தது. அதற்குப் பிறகு

நாளொன்றுக்குச் கொஞ்சம்தான் நட முடிந்ததால் சோர்புற்றார். வேலையைப் பார்வையிட வந்த சொந்தக்காரரிடம் தன் நிலைமையை விளக்கினார். தோப்புச் சொந்தக் காரர் தோட்டக் காரரது வேலையைப் பார்த்துவிட்டுக் காரணத்தைக் கண்டுபிடித்தார்.

"உன் கோடாலி மொட்டையாகி விட்டது," என்று சொந்தக்காரர் கூறினார். "முதலாவது அதைத் தீட்டினால் நீ குழிதோண்டும்போது வீணாக பலத்தைச் செலவழிக்க மாட்டாய்," என்றார். "இல்லை ஐயா, நான் வேலையைச் சீக்கிரம் முடிக்கவேண்டும். அதற்கெல்லாம் எனக்கு நேரம் கிடையாது," என்றார் தோட்டக்காரர். இருப்பினும் எஜமானின் கட்டாயத்தின் பேரில் கோடலியைத் தீட்டிவிட்டு வந்தார். அடுத்தநாள் நாற்பது கன்றுகள் நட்டு கூலி பெற்றார். வேலை துரிதமாய் முடிந்து, சம்பளம் பெற்று மகிழ்வடைந்தார்.

பலமுறை நாம் ஜெபமின்றி காரியத்தைச் செய்ய முற்பட்டு பலத்தை வீணடிக்கிறோம். ஜெபமே ஜெயம்!

18

யானையின் பெருமை

பெருமை பிடித்த யானை ஒன்று, "என்னால் எல்லாம் செய்யமுடியும், என்னைப்போல் யாரும் கிடையாது," எனப் பிளிரிக்கொண்டு காட்டைச் சுற்றி வந்தது. அதற்குப் பாடம் கற்பிக்க விழைந்த நரி ஒன்று ஓர் எறும்பின் உதவியை நாடியது. இருவரும் யானையிடம் சென்றனர். அழுவதுபோல் பாசாங்கு செய்த நரி, "நான் ஒரு ஊசி வாங்கி வந்தேன். அது பாறைகளின் இடுக்கில் விழுந்துவிட்டது. அதை எடுக்க முடியவில்லை. எனக்கு உதவி செய்வாயா?" என்று கண்ணைக்

கசக்கியது. யானை எவ்வளவோ முயற்சித்தும் அதால் முடியவில்லை. “நான் முயன்று பார்க்கிறேனே,” என்று எறும்பு பாறைகளின் இடுக்கில் நுழைந்து ஊசியைத் தூக்கி வந்தது. தன்னால் முடியாததைச் செய்யவும் ஆட்கள் உண்டு என்று உணர்ந்து வெட்கிய யானை மற்றவர்களை மதிக்கத் துவங்கியது.

குப்பை எடுக்க உங்கள் வீட்டிற்கு வருவோரை நீங்கள் காணலாம். தெருக்களையும் புகைவண்டி நிலையங்களையும் சிலர் சுத்தம் செய்கின்றனர். அவர்களை அற்பமாய் எண்ணாதீர். அவர்களைப் பார்த்து புன்முறுவல் பூத்து, “சுத்தம் செய்வதற்காக நன்றி. நல்ல வேலை செய்கிறீர்கள்,” என்று பாராட்டுங்கள். உங்களைக் குறித்துப் பெருமிதமாக எண்ணாதீர்கள்.

19

இலவசம், இலவசம், இலவசம்!

அமெரிக்கா போய் சம்பாதிக்க வேண்டும் என்று சேகருக்கு மூக்கு முட்ட ஆசை. ஆனால் அவனுக்கோ காசு கிடையாது. ஆகவே அவனது மாமா அவனுக்குக் கப்பல் ஒன்றில் பயணச்சீட்டு வாங்கித் தந்தார். சேகர் துள்ளிக் குதித்தான். ஆனால் பத்து நாள் பயணத்தில் சாப்பாட்டிற்கு என்ன செய்வது? தன்னிடமிருந்த பணத்தில் கொஞ்சம் ரொட்டி வாங்கிக் கொண்டான்.

குறிப்பிட்ட நாளில் உல்லாசமாகக் கப்பல் ஏறினான். கடல் பயணம் குதூகலமாக இருந்தது. ஆனால் சாப்பாட்டு வேளை சூப்பர் வாசனை காற்றில் கலந்து வரும்போது அவன் வெளியே சென்று தன் ரொட்டியைத் தின்பான்.

எட்டு நாட்கள் கழித்து ஒரு நாள் அவன் வெளியே நின்றபோது உடன்பயணி ஒருவர், ஏன் அவன் உணவு வேளையில் வருவதில்லை என்று வினவினார். சேகர் தன் நிலைமையை விளக்கி, தான் எப்படி காய்ந்த ரொட்டியைச் சாப்பிட்டுச் சாமாளிப்பதாகக் கூறினான். ஆச்சரியமுற்று அவர் கேட்டார், "உன் பயணச் சீட்டோடு உன் உணவு சேர்ந்தது என்று உனக்குத் தெரியாதா?"

எத்தனை அற்புதமான அனுபவத்தைச் சேகர் இழந்து போனான்! இலவசமாக அப்பமும் பாலும் மற்ற எல்லா நன்மையானவைகளையும் விருந்துண்ண ஆண்டவர் நம்மை அழைக்கிறார். அவரிடம் வந்தால், உங்கள் தேவைகளை அனைத்தையும் அவரே பொறுப்பேற்பார்.

20

யார் தவறு?

ஆயர் ஒருவரது கால்சாட்டை மிக நீளமாக இருந்ததால் தன் மனைவியிடம் அதை இரண்டு அங்குலம் குறைக்கச் சொன்னார். மறுநாள் அது அவருக்குத் தேவைப்பட்டது. இரவு, அவள் தன் மூன்று மகள்களையும் அழைத்து விவரத்தைக் கூறி அப்பாவிற்கு உதவி செய்யும்படிக் கூறினாள்.

மூத்த மகளுக்குத் தூக்கம் வரவில்லை. பத்து மணிக்கு எழுந்து கால்சட்டையில் 2 அங்குலம் வெட்டித் தைத்துவிட்டு உறங்கச் சென்றாள். கெட்ட சொப்பனம் வந்து, இரவு 12 மணிக்கு விழித்துக்கொண்ட இரண்டாம் மகள், "எழுந்ததே

எழுந்தோம்; வேலையை முடித்துவிடலாமே", என்று எண்ணி, 2அங்குலம் வெட்டித் தைத்தாள். மூன்றாமவள் காலை நான்கு மணிக்கு எழுந்தபோது, முதல் வேலையாக அப்பா கால்சட்டையைச் சரிசெய்வோம் என்று 2 அங்குலம் வெட்டித் தைத்தாள். ஆறு மணிக்கு எழுந்த தாய், "என் பிள்ளைகள் நான் சொல்வதைச் செய்வ தேயில்லை. நான்தான் செய்யவேண்டும் என்று நினைக்கிறேன்," என்று சொல்லி 2 அங்குலம் வெட்டித் தைத்தாள். ஆலயத்துக்குப் போகுமுன் கால்சட்டையை அணிந்த ஆயரின் அதிர்ச்சியைச் சொல்லவும் வேண்டுமோ?

நாம் ஒரு வேலையைச் செய்யும்போது ஒருவரோடொருவர் காரியத்தைப் பகிர்ந்துகொள்வதும் ஒத்துழைப்பும் மிக அவசியம்.

21

அடடா!

சிறுவன் ஒருவன் விளையாடிக்கொண்டிருந்தபோது அவனது விரலில் அடிபட்டது. அவன் அழுதுகொண்டே அப்பாவிடம் ஓடி வந்தான். அப்பா மடிக்கணினியில் வேலையாயிருந்தார். "அப்பா, விரல் வலிக்கிறது," என்றுச் சிறுவன் அழுதான். அப்பா நிமிர்ந்து பார்த்து, "நான் அலுவலாயிருக்கிறேன். போ; என்னால் ஒன்றும் செய்ய



முடியாது," என்று கோபித்தார். "அப்பா, நீங்கள், அடடா என்று சொல்லியிருக்கலாமே," என்று விம்மினான் சிறுவன்.

ஆம், நாம் யாருமே, எந்த உதவியும் செய்யமுடியாத பட்சத்தில், நமது பரிவைக் காட்டும் படியாக, "அடடா, இப்படியாகி விட்டதே" என்று சில ஆறுதல் வார்த்தைகளைக் கூறலாம்.

22

செய்வதா, செய்யாமலிருப்பதா?

இரண்டு மருந்து நிறுவனங்கள் தங்கள் பிரதிநிதிகளை ஒடிஷா மாநிலத்திற்கு அனுப்பி அங்கே கிளை துவங்கலாமா எனப் பார்த்து வரக் கேட்டன. ஒருவர் ஒடிஷாவில் சுற்றித் திரிந்து தம் அறிக்கையை அனுப்பினார்: 'இங்கு யாரும் மருந்துகள் அதிகமாகப் பயன்படுத்து வதில்லை. அதனால் இங்கே கிளை துவங்கினால் அது நொடித்து விடும்." அடுத்தவரும் தம் அறிக்கையை அனுப்பினார்: "இங்கே யாரும் மருந்துகள் அதிகமாக பயன்படுத்து வதில்லை. அதனால் இங்கே கிளை துவங்கினால் செழித்தோங்கும்!"



எதையுமே இரண்டு கண்ணோட்டத்தில் பார்க்கலாம். எப்பொழுதுமே சாதகமான கண்ணோட்டத்தில் பார்க்கப் படியுங்கள்.

23

அழகிய காகம்

காகம் ஒன்று மயில் கூட்டத்தைப் பார்த்தது. பின்பு கண்ணாடியைப் பார்த்தது. தன்னைக் குறித்த இழிவான எண்ணம் அதற்கு உண்டானது. மயில்களைப் போல இருக்க விரும்பி, மயில் சிறகுகளைச் சேகரித்துத் தன் சிறகுகளுடன் சொருகி, மயில் கூட்டத்தைச் சேர்ந்துகொள்ளச் சென்றது. ஒரே பார்வையில் அடையாளம் கண்டுகொண்ட மயில்கள் காகத்தைக் கொத்தித் துரத்த அது தன் காக்கை நண்பர்களிடம் ஓடிவிட்டது.

இது விநோதமானப் பறவையாக இருக்கிறதே என்று காகங்கள் அதை விரட்டியடித்தன. ஆகவே அது மயில் சிறகுகளைப் பிடிங்கிப்

போட்டு பழைய காகமானது. இப்போது தன் கூட்டத்தோடு உல்லாசமாக இருந்தது.

நம்மைக் குறித்தக் குறை வெண்ணம் நம்மைப் பிரகாசிக்க விடாது. கடவுள் உன்னை உருவாக்கி, "நல்லது," என்றார். உங்களை ஏற்றுக்கொள்ளுங்கள், உங்களை நேசியுங்கள், உங்கள் தாலந்துகளை வளர்த்து வாழ்க்கையில் முன்னேறுங்கள்.

24

இரட்டை வேடம்

ஒரு காட்டில் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் நெடுநாள் யுத்தம் நடந்தது. மரத்திலிருந்த சில புத்திசாலி வௌவால்கள் இதைக் கவனித்தன. மிருகங்கள் ஜெயிப்பதாகத் தெரிந்தால் அவை மிருகங்களோடு சேர்ந்துகொள்ளும். மிருகங்கள் அவற்றை சந்தேகப் பார்வையோடு பார்த்தால்: நாங்கள் குட்டி போட்டுப் பால் கொடுக்கிறோம், என்று பதில் சொல்வர். பறவைகள் வெற்றி எடுப்பதுபோல் தோன்றினால், அவை பறவைகளோடு சேர்ந்துகொண்டு: "நாங்கள் எப்படிப் பறக்கிறோம் பாருங்கள், நாங்கள் உங்கள் கட்சிதான்," என்பர். இறுதியாக யுத்தம் முடிந்து சமாதான உடன்பாடு ஏற்பட்டது. வௌவால்களின் இரட்டை வேடம் கண்டுபிடிக்கப்பட்டதால் அவை கொண்டாட்டத்திற்கு அழைக்கப்படவில்லை.

நேர்மையாயிருங்கள், இரட்டை வேடம் போடாதீர்கள்.

25

கடவுளோடு நெருக்கம்

சீடன் ஒருவன் தன் குருவிடம் தான் கடவுளிடமிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கிறான் என்று அறிய முடியுமா என்று வினவினான். குரு எளிமையாகப் பதிலளித்தார்: "உனக்குள்ள யாவற்றையும் வரிசையாக அடுக்கு. அதுவே உனக்கும் கடவுளுக்கும் இடையிலுள்ள தூரம்."

நமக்காக நாம் எவ்வளவு சேகரிக்கிறோமோ அவ்வளவு தூரம் நாம் கடவுளை விட்டு விலகியிருக்கிறோம். எவ்வளவுக்கெவ்வளவு தியாகம் செய்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு கடவுளை நெருங்குகிறோம்.

26

மூளையைப் பயன்படுத்துங்கள்!

சிறுவர்கள் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். ஜீவன் அதை ஓங்கி அடிக்க அது பறந்து ஓர் ஆழமான குழியில் விழுந்தது. எல்லாரும் ஒவ்வொருவராக கையை குழிக்குள் விட்டு பந்தை எடுக்க முயன்றனர். குழி ஆழமாக இருந்ததால் பந்து எட்டவில்லை. பந்தின் சொந்தக்காரனான வைத்யா அழத் துவங்கினான். சாம் ஒரு யோசனை செய்தான். ஓடி ஒரு வாளி தண்ணீர் கொண்டு வந்து குழியில் ஊற்றினான். பந்து மிதந்து மேலே வர யாவரும் கைதட்டினர்.

கடினமான எந்தச் சூழ்நிலையிலும் மூளையைப் பயன்படுத்தினால் யுக்தி உதயமாகும்.

27

மரியாதை கொடுத்தால் மரியாதை!

ஜானுக்கு வயது பத்து ஆனதும், இனி தனக்கு யாரும் கட்டளை கொடுப்பதை நிறுத்தும் காலம் வந்துவிட்டது என்று நினைத்தான். தன் வாழ்க்கையின் கடிவாளக் கயிறுகளை தன் கையில் பிடித்துக் கொள்ளும் வயது வந்தது. இனி தன் வாழ்க்கையைத் தானே நடத்தலாம் என நம்பிக்கை கொண்டான்.

எப்போதும் பாட்டி தாத்தா வீட்டிற்குப் பள்ளியிலிருந்து வந்து, அலுவலகத்திலிருந்து அம்மா வந்து தன்னை அழைத்துச் செல்லக் காத்திருப்பான். இந்த இடைவேளையில் அவனுக்கு ஏதாவது சாப்பிடக் கிடைக்கும்.

சுத்தம், ஒழுங்கு விரும்பும் பாட்டியம்மாவிற்கு அவன் பொருட்களை அங்கும் இங்கும் விசிறுவதும் ஈரத் துண்டு குளியலறை தரையில் கிடப்பதும் பிடிக்காது. துண்டை விரித்துக் கம்பியில் போடவும், குளியலறை விளக்கை அணைக்கவும், மிட்டாய்த் தாளை எடுத்துக் குப்பைக் கூடையில் போடவும், நாற்காலியை நேராய்ப் போடவும் ... ஜானைக் கேட்பாள். மட்டுமல்ல, ஜானின் வாய் ஊறவைக்கும் தின்பண்டம் ஏதாவது வைத்திருப்பாள்.

பாட்டியம்மாவின் அன்பான கட்டளைகள் ஜானுக்கு எரிச்சல் மூட்டும். ஒரு நாள் தான் யாரென்று அவளுக்குக் காட்ட நினைத்தான். வழக்கம்போல அவள், “செல்லமே, குளியலறை விளக்கை அணைத்து விடு ...” என்றதும் ஜான் சட்டென்று, “நான் என்ன வேலைக்காரனா? அது என் வேலை இல்லை,” என்றான். திடுக்கிட்ட பாட்டியம்மா விளக்கை அணைத்துவிட்டு மற்ற வேலைகளைச் செய்தாள்.

அடுத்தநாள் ஜான் பசி பிடுங்க பள்ளியிலிருந்து வந்தான். கோழிக்குழம்பு வாசனை மூக்கைத் துளைத்தது. எப்போதும்போல்

பாட்டியம்மா இட்லியும் கோழிக்குழம்பும் பறிமாறுவார்கள் என்று எதிர்பார்த்தான். ஆனால் அவளோ அவனை அன்போடு வரவேற்று விட்டு தன் அலுவல்களைப் பார்த்தாள். ஜான் தயக்கத்தோடு, "பாட்டிமா, சாப்பிட ஏதாவது தருகிறீர்களா?" என்றான். பட்டென்று பதில் வந்தது, "அது என் வேலையல்ல. நானென்ன வேலைக்காரியா?" ஜானுக்கு வயிறு கிள்ளியது. பாட்டியம்மாவோ மிக அலுவலாயி ருந்தார்கள்.

அரைமணி நேரம் கழித்து ஜான் மெதுவாகப் பாட்டியம்மாவிடம் சென்று, "பாட்டிமா, ரொம்ப சாரி. இனிமேல் கீழ்ப்படிவேன்," என்றான். பாட்டியம்மா அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டு, சுடச்சுட இட்லியும் கோழிக்குழம்பும் பரிமாறினார்கள். ஒரு வீட்டில் எல்லாருமே எல்லாருக்கும் வேலைக்காரர்தான், எல்லோரும் வேலை செய்ய வேண்டும், என்று விளக்கினார்கள். அவள் சமைக்க, ஜான் சாப்பிடுகிறான். அப்படிதான் அவரவர் வேலையைப் பார்க்கவேண்டும் என்றாள். ஜான் இப்போது புரிந்துகொண்டான்.

ஒருவருக்கொருவர் பணி செய்வதே வீட்டுப் பண்பு.

28

தலைக்கனம் பிடித்த சேவல்

அழகிய பலவர்ண சேவல் ஒன்று தன் நிறங்களைக் குறித்தும் வேலையைக் குறித்தும் பெருமிதம் கொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும் இருட்டோடே எழுந்து கூவும். பின்பு மிகவும் களைப்பாயிருப்பது போல நடிக்கும். தான் வேலை செய்யாவிட்டால் ஒன்றும் நடக்காது; தினம் காலை தான் சூரியனை எழுப்பிவிட வேண்டும்; அப்போதுதான் சூரியன் விழித்துக்கொண்டு, மக்களும் எழும்பி, உலகம் இயங்க ஆரம்பிக்கும் என்று எல்லாரிடமும் சொல்லி ஜம்பமடித்துக்கொள்ளும். "ஒருநாள் கூட நான் அசந்து தூங்கிவிட முடியாது. உலகமே நின்றுவிடும்," என்று எப்போதும் பீத்திக்கொள்ளும்.

ஒருநாள் சேவல் பிந்தி படுக்கச் சென்று காலை ஏழு மணிக்குத் தான் எழுந்தது. மணியைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தது. "அடப்பாவமே, சூரியன் இன்னும் தூங்கிக் கொண்டிருக்குமே! உலகம் எழுந்திருந்திருக்காதே," என்றுப் புலம்பிக்கொண்டே, வீட்டுக் கூரைக்குப் பறந்து சென்று கூவப்போனது. அது கண்ட காட்சி என்ன என்று நினைக்கிறீர்கள்? என்றும் போல சூரியன் உதித்திருந்தது. மக்கள் அலுவலாக ஓடிக்கொண்டிருந்தனர். தன்னையன்றி உலகம் இயங்க முடியும் என்று சேவல் புரிந்துகொண்டது. பெருமையைக் களைந்து ஐம்பமடிப்பதை நிறுத்திக்கொண்டது.

நாமில்லாவிட்டால் ஒன்றும் ஆகிவிடாது. கடவுளுடைய கரத்தில் தாழ்மையாய் இருப்போம்.

29

உழைப்பே உயர்வு!

ஏழை ஒருவன் போதகர் ஒருவரிடம் சென்று, "நான் கடவுளை விடாமல் ஆராதிக்கிறேன். அவரோ எனக்குச் செல்வத்தைக் கொடுத்து ஆசீர்வதிக்கவில்லையே," என்றான். போதகர், "நான் உனக்கு 50,000 ரூபாய் கொடுக்கிறேன். உன் கண்கள் இரண்டையும் கொடு," என்றார். திடுக்கிட்ட அவன், "ஐயா, நீங்கள் ஒரு கோடி ரூபாய் கொடுத்தாலும் என் கண்களை நான் கொடுக்கமுடியாது" என்றான். போதகர் சொன்னார், "உன் இரண்டு கண்கள் மட்டுமே ஒரு கோடி ரூபாய் பெறுமானால், கடவுள் கொடுத்த உன் உடல் எத்தனை விலையேறப் பெற்றது. உன் உடலை முழுமையாய்ப் பயன்படுத்துவாயானால் கடவுள் உனக்குச் செல்வங்களைக் கொடுத்து ஆசீர்வதிப்பார்."

தனது சோம்பேறித்தனத்தைக் குறித்து வெட்கிய ஏழை கடினமாய் உழைத்தான். கடவுளும், அவனுக்கு அதிகமான செல்வங்களைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.

கடின உழைப்பு உயர்வு தரும்!

30

ஆப்பிரிக்க இளவரசி

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஆப்பிரிக்காவில் ஓர் அரசன் இருந்தார். அவரது மகளை எல்லாரும் புகழ்ந்து, "ரோஜாப்பூ மாதிரி இருக்கிறாய்" என்றனர். அந்நாட்களில் ஆப்பிரிக்காவில் கண்ணாடி கிடையாது. ஆகவே இளவரசி தான் ஓர் அழகி என்று எண்ணியிருந்தாள்.

ஒருமுறை சில வணிகர்கள் அங்கு வந்தனர். அவர்கள் அவளுக்கு ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி பரிசளித்து, அது அவளது முகத்தைப் பிரதிபலிக்கும் என்று விளக்கினர். அவர்கள் சென்ற பின் அவள் தன் அறைக்கு ஓடி பெட்டியைத் திறந்து கண்ணாடியை எடுத்தாள். வாழ்க்கையில் முதல் முறையாக தன் முகத்தைப் பார்த்தாள். கோபத்தில் கண்ணாடியைத் தரையில் எறிந்து உடைத்துப் போட்டாள்.

சில சமயம் மற்றவரது புகழ்ச்சியில் ஏமாந்துபோகிறோம். நாம் இருக்கும் நிலைமையை அப்படியே பிரதிபலிப்பது பைபிளாகிய கண்ணாடியே. நம்மைக் குறித்து பைபிள் சொல்வதை ஏற்றுக்கொண்டு, அதன் ஆலோசனைப்படி நம்மை மாற்றிக்கொண்டே வருவோமானால் நமது அசிங்க குணம் மெல்ல, மெல்ல இயேசுவைப் போலாகி, தேவனது அழகிய இளவரசிகளாகவும் இளவரசர்களாகவும் மாறுவோம்.

31

தாயின் ஞானம்

தாமஸ் ஆல்வா எடிசன் ஒருநாள் பள்ளியிலிருந்து வந்து, தன் தாயினிடத்தில் ஒரு கடிதத்தைக் கொடுத்து, அது அம்மா கையில் மட்டுமே கொடுக்கச் சொல்லி தன் ஆசிரியர் சொன்னதாகக் கூறினார்.



அமைதியாகக் கடிதத்தை வாசித்த தாய், கண்ணீரோடு அதைத் தன் மகனுக்குப் பின் வருமாறு வாசித்துக் காண்பித்தார்: "உங்கள் மகனது பிரமாத அறிவுக்கு எங்கள் பள்ளி மிகச் சிறியது. அவனுக்குப் போதிக்கக்கூடிய திறமை வாய்ந்த ஆசிரியர்கள் எங்களிடம் இல்லை. ஆகவே உங்கள் மகனுக்கு நீங்களே கற்றுக் கொடுப்பது நல்லது."

அதன் பிறகு அவரது தாய் தனக்குத் தெரிந்தவற்றை அவருக்குக் கற்றுக்கொடுத்து பழைய புத்தகங்கள் வாங்கிப் படிக்கக் கொடுத்தார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு தாய் இறந்து போனார். அந்நூற்றாண்டின் தலை சிறந்த விஞ்ஞானியும் ஆராய்ச்சியாளருமென எடிசன் புகழெய்தினார். ஒருநாள் வீட்டைச் சுத்தம் செய்யும்போது தான் பள்ளியிலிருந்து தாயினிடம் கொண்டு வந்த கடிதத்தைக் கண்டெடுத்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:

"உங்கள் மகன் மனவளர்ச்சியில் குறைவுபடுவதால் தயவு செய்து எங்கள் பள்ளிக்கு அனுப்பாதீர்கள். உங்கள் மகனால் எங்கள் பள்ளி தரப்பட்டியலில் இறங்கிவிடும். வீட்டிலேயே அவனுக்குக் கற்பிப்பது நலம்."

கடிதத்தை வாசித்த எடிசன் கண்ணீர் வடித்தார். தன் நாட் குறிப்பேட்டில் பின்வருமாறு எழுதினார்:

"மனவளர்ச்சி குன்றிய தாமஸ் ஆல்வா எடிசன், விஞ்ஞானியும் ஆராய்ச்சியாளருமானது அவரது தாயினாலேயே."

தன்னம்பிக்கை உள்ளவராயிருங்கள். இந்த உலகம் உங்களைக் குறித்த தனது கணிப்பினால் உங்களைச் சேற்றில் தள்ளிவிட இடமளிக்காதீர்கள்.

32

அழகிய ஜாடிகள்

அரசர் ஒருவருக்கு ஜாடிகள் என்றால் மிகப் பிரியம். விதவிதமான ஜாடிகளைப் பல இடங்களிலிருந்து சேகரித்து, அரண்மனையில் காட்சிப் பொருட்களாக வைத்திருந்தார். ஒருநாள் அவற்றைத் துடைத்து வைக்கும் வேலைக்காரன் ஜாடி ஒன்றைக் கீழே போட்டு உடைத்து விட்டான். கோபம் கொண்ட மன்னர் அவனை மறுநாள் தூக்கிலிடக் கட்டளையிட்டார். அரசனின் மதியற்ற இம் முடிவிற்கு நாடே துக்கித்தது.



தேசத்தில் ஞானி ஒருவர் இருந்தார். காரியத்தைக் கேள்விப்பட்ட அவர் அரசனிடம் வந்து தான் உடைந்த ஜாடியை உடைந்த அறிகுறியே தெரியாமல் ஒட்டிவிடுவதாகக் கூறினார். மகிழ்ச்சியடைந்த அரசர் அவரை ஜாடிகளிடம் அழைத்துச் சென்றார். ஒரு நொடிப்பொழுதில் அவர் தன் கரத்தை வீசி எல்லா ஜாடிகளும் தரையில் விழுந்து சுக்கு நூறாக நொறுங்கும்படிச் செய்தார். அவரது முற்போக்கினால் ஆத்தரமடைந்த அரசர் விளக்கம் கேட்டார்.

ஞானி சொன்னார், “ஒவ்வொரு ஜாடி உடையும்போதும் ஒரு உயிர்போகும். இத்தனை ஜாடிகளுக்கு எத்தனை உயிர் போகும். இப்போதோ என்னுயிர் மட்டும்தானே போகும். உமது மக்கள் யாவரும் பாதுகாப்பாக இருப்பர்.”

தனது மூடத்தனத்தை உணர்ந்த அரசன் தூக்குத் தண்டனையை ரத்து செய்தார். ஞானியை தன் ஆலோசகராக வைத்துக்கொண்டார்.

கோபம் புத்தியை மழுக்கும்.

33

உங்களை நேசியுங்கள்!

நதியானது நெடுந்தூரம் பயணித்துக் கடலை அடைந்தபோது ஆச்சரியம் அடைந்தது. கடல் எத்தனை பெரியது; நான் எவ்வளவு சிறிதாக இருக்கிறேன் என்று தாழ்வெண்ணம் கொண்டது. கடலிடம், "அண்ணா, நான் உன்னைப்போலாக விரும்புகிறேன். நீ எத்தனைப் பெரியவன். உன்னோடு கலக்கும்போது என் பெயரைக்கூட நான் இழந்து போகிறேன். என்னைப் போன்ற நதிகளெல்லாம் உன்னிடம்தான் வரவேண்டும். நாங்கள் வாழ்ந்தென்ன மாண்டென்ன," என்று சொல்லி நதி சலித்துக்கொண்டது.

கடல் நதியிடம் சொன்னது: "நீ என்னைப் பாராட்டினாலும் எனக்கும் துக்கங்கள் உண்டு. நீ போகுமிடமெல்லாம் வயல்களையும் தோப்புகளையும் ஆசீர்வதித்து மண்ணைச் செழிப்பாக்குகிறாய். நீ விளைவிக்கும் மலர்களையும் கனிகளையும் காய்கறிகளையும் யோசித்துப் பார். மக்களின் தாகத்தையும் தீர்க்கிறாய். எனக்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லை."

அவ்வமயம் தென்றல் வீசிச் சொன்னது, "நீங்கள் இருவருமே புகழப்படத்தக்கவர். கடலில் முத்துக்களும், பவளங்களும், இப்படி விலையேறப்பெற்றவைகளும் உண்டு. அது மட்டுமா? எத்தனை வகை மீன்கள்! பெரிய பெரிய கப்பல்கள் ஏந்திச் செல்லப்படும். ருசியான உப்பை அனைவரும் பெறுகின்றனர். நீங்கள் இருவருமே கடவுள் உலகிற்குத் தந்த வரப்பிரசாதங்கள். உங்கள் கடமையை உண்மையாய்ச் செய்யுங்கள்." ஆறும் கடலும் மகிழ்ச்சியுற்றன.

நாம் ஒவ்வொருவரும் தனிச் சிறப்புடையவர்கள். நமது கடமையை உத்தமமாய்ச் செய்ய வேண்டும். கடவுள் உங்களைப் படைத்தபடியே உங்களை நேசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

34

பரலோகம் எங்கே?

போதகர் ஒருவர் பரலோகத்தைக் குறித்து அற்புதமாய்ப் பிரசங்கித்தார். பிரசங்கத்திற்குப்பின் ஒரு மனிதன் அவரை அணுகி, "ஐயா, உங்கள் பிரசங்கம் பிரமாதம். ஆனால் பரலோகம் எங்கே?" என்று கேட்டான். போதகர் ஒரு நிமிடம் யோசித்துவிட்டு, "அதோ பார். தெரு கோடியில் ஒரு குடிசை தெரிகிறதா? அங்கே ஒரு விதவை இரு குழந்தைகளுடன் வசிக்கிறாள். அவள் நோய்வாய்ப்பட்டிருக்கிறாள். அவளைப் பராமரிக்க யாருமில்லை. வீட்டில் உணவோ மளிகை சாமான்களோ இல்லை. போய் அவளுக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று பார். அதன் பிறகும் நீ பரலோகத்தைக் காண முடியாவிட்டால் நீ அவளுக்காகச் செய்த செலவை நான் உனக்குக் கொடுத்துவிடுகிறேன்" என்றார்.



அங்கு சென்ற அவன், போதகர் சொன்னதைவிட நிலைமை மோசமாயிருப்பதைக் கண்டான். மருத்துவரை அழைத்து வந்து அவளுக்கு சிகிச்சையளித்தான். அக்குடும்பத்திற்கு உணவும், உடைகளும், மளிகைப் பொருட்களும் வாங்கி வந்தான். அவனது மனைவி வந்து அவ்வீட்டைச் சுத்தம் செய்தாள். பின்பு அவ்விதவையைத் தங்கள் வீட்டில் பணியமர்த்தினான்.

அம்மனிதன் போதகரைச் சந்தித்துச் சொன்னான், "ஐயா, நான் பரலோகத்தில் வாழ்கிறேன். அதற்கு வழிகாட்டிய உங்களுக்கு நன்றி."

ஏழைகளுக்கும் தள்ளப்பட்டோருக்கும் உதவி செய்து பரலோகத்தைப் பூலோகத்தில் அனுபவியுங்கள்.

35

கொடூரமான போலீஸ்காரர்

குட்டி ஜேம்ஸ் தன் தந்தையோடு கடைவீதிக்குச் சென்றபோது காணாமல் போனான். அங்காடியில் அழுதுகொண்டே நின்றிருந்தான். இரக்கமுற்ற ஒருவர் அவனைக் காவல்நிலையத்தில் கொண்டு சேர்த்தார். அவன் அழுதுகொண்டே இருந்தான். யாராலும் அவனைச் சமாதானப்படுத்த முடியவில்லை. இறுதியாக தடித்த, உயரமான, முறுக்கு மீசை வைத்திருந்த ஒரு காவலர் அவனது கையைப் பிடித்தார். ஜேம்ஸ் இன்னும் பயந்து அலறி அவருடன் செல்ல மறுத்தான். ஆனால் அந்த பயங்கரமான காவலர் அவனை இன்னொரு அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கே அவனது அப்பா கரங்களை விரித்துப் புன்முறுவலுடன் நின்றார். ஜேம்ஸ் தன் அப்பாவின் அரவணைப்பிற்குள் ஓடிச் சென்று, திரும்பி, அந்த பயங்கரமான காவலரைப் பார்த்துச் சிரித்தான்.



மரணத்தைக் குறித்து பயப்பட வேண்டாம். அது பயங்கரமாய்த் தெரிந்தாலும் நமது பாசமுள்ள பரம தந்தையிடம் கொண்டு சேர்ப்பது அதுவே.

36

யாருக்கு லாபம்?

ஒரு புலியும் ஒரு காட்டெருமையும் தண்ணீர் குடிக்க ஒரு குளத்திற்கு வந்தன. அங்கே சண்டை வந்து ஒன்றை ஒன்று தாக்கிக் கொண்டன. சில கழுகுகள் அங்கே மரத்தின்மேல் உட்கார்ந்திருந்தன. அந்தக் கழுகுகள் பேசிக் கொள்வதைக் கேட்ட இருவரும் சற்று நின்று கவனித்தன. கழுகுகள் தம் குஞ்சுகளிடம், "பொறுமையாயிருங்கள். சீக்கிரம் இரண்டில் ஒன்று சாகும். அப்போது நாம் ஜாம் ஜாம் என்று விருந்து சாப்பிடலாம்" என்று சொல்லிக்கொண்டிருந்தன.



புலியும் காட்டெருமையும் தம்மைக் குறித்து வெட்கமடைந்தன. அவை சண்டையிடுவதை நிறுத்தி, தண்ணீர் பருகி சமாதானமாகப் பிரிந்து சென்றன.

சண்டையினால் யாருக்கு லாபம்?

37

உயிர்காக்கும் இரத்தம்

நான் என் மருத்துவப் படிப்பை முடித்து ஓராண்டு பயிற்சியிலிருந்தேன். எங்கள் வார்டில், அறுவை சிகிச்சை தேவைப்பட்டதால் இரத்தம் கொடுக்கப்பட வேண்டிய நோயாளி ஒருவர் இருந்தார். தலைமை மருத்துவர், உறவினரிடம் இரத்தம் கேட்கும் பொறுப்பை எனக்களித்தார். இரத்தத்தின் தேவையை அவர்களுக்கு உணர்த்தி யாராவொருவர் இரத்தம் கொடுக்கும்படி ஆலோசனை கூறினேன். அவர்கள் வார்டுக்கு வெளியே சென்று, சில நேரம் தங்களுக்குள் விவாதித்தனர். ஐந்து நிமிடங்கள் கழித்துத் திரும்ப வந்து, "எங்கள் வீட்டில் ஆடு ஒன்று இருக்கிறது. அதன் இரத்தத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியுமா?" என்று கேட்டனர்.



ஆட்டு இரத்தம் மனிதனது உடலைக் கூட காப்பாற்ற முடியாதபோது, அவனது ஆத்துமாவை எப்படிக் காப்பாற்றும்? கடவுளுடைய மகனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே நம்முடைய பாவங்கள் எல்லாவற்றையும் நீக்கி நம்மை இரட்சிக்க வல்லது. அவரை நம்புங்கள்.

38

முழுமையும் தாண்டுங்கள்!

மாபெரும் உயர்ந்த சுவரொன்று இருந்தது. சுவற்றின் ஒருபுறம் செவிடர், குருடர், மனவளம் குன்றியோர், ஊனமுற்றோர், பசியுற்றோர், ஏழைகள், நோயாளிகள், துன்பத்திலிருப்போர் மற்றும் நசுக்கப்பட்டோர் இருந்தனர். சுவற்றிற்கு மறுபக்கம் மக்கள் மகிழ்ச்சியாக விடுதலை யோடு ஆரோக்கியமாகவும் ஆர்ப்பரிப்போடும் இருந்தனர். சுவற்றின் நடுவில் பத்தடி விட்டம் கொண்ட ஒரு கிணற்றைத் தவிர சுவற்றைத் தாண்டி அப்புறம் செல்ல வேறு வழியில்லை.



நோயுற்றோர் மற்றும் வேதனையிலிருப்போர் சிலர் பத்தடி கிணற்றைத் தாண்டி மறுபக்கம் அடைந்தனர். அந்நிமிடமே அவர்கள் ஆரோக்கியம் அடைந்து நடனமாடினர். சிலர் இரண்டடி, மூன்றடி, எட்டு அடி, ஒன்பது அடிகூடத் தாண்டினர். அவர்கள் யாவரும் கிணற்றுக்குள் விழுந்து அமிழ்ந்து போயினர்.

மோட்சத்தை அடையவேண்டுமானால் நாம் சற்றும் குறைவு படுவதை கடவுள் விரும்பவில்லை. கடவுளுடைய கிருபையோடு நாம் நூற்றுக்குநூறு அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.

39

மாபெரும் அற்புதம்

குரு ஒருவர் தம் சீடர்களுடன் வசித்து வந்தார். சீடன் ஒருவனை மளிகைப் பொருட்கள் வாங்கிவர அனுப்பினார். இக்குருவின் மேல் பொறாமை கொண்ட வேறொரு குரு அவனைச் சந்தித்தார். அவர் அச்சீடனைக் கூப்பிட்டு, "உன் குரு ஒன்றுக்கும் உதவாதவர். அவர் அற்புதம் எதுவும் செய்வதில்லை. என்னைப் பார், நான் நீரின் மேலும் நெருப்பின் மேலும் நடப்பதோடு வானிலும் பறப்பேன். நீ ஏன் அவரிடம் சீடனாய் இருக்கிறாய்?" என்றார்.

அச்சீடன், "நான் என் குருவை மதிக்கிறேன். அவர் அற்புதமான மனிதர். அவரில் மாபெரும் அற்புதத்தைக் காண்கிறேன். ஆகவேதான் அவரது சீடனாயிருக்கிறேன்" என்றான். "அவரில் என்ன அற்புதத்தைக் கண்டாய்?" என்று கேட்டார் அந்தக் குரு. சீடன் பதிலளித்தான், "அவர் யாரைக் குறித்தும் தீது பேசுவதில்லை." அக்குரு வெட்கி தலைகுனிந்தார்.

யாரைக் குறித்தும் தீது பேசாதீர்கள்.

40

கவனம்

விஷ்ணு துக்கமாயிருந்தான். "அம்மா, எனக்குப் பொது அறிவில் இரண்டு மதிப்பெண்கள் போய்விட்டன" என்றான். "கேள்வித் தாளைக் கொண்டு வா. எங்கே மதிப்பெண்களை இழந்தாய் என்று பார்க்கலாம்" என்று சொன்னார்கள் அம்மா.

விஷ்ணு சரியாக பதில் சொல்லிக்கொண்டே வந்தான். "அக்டோபர் இரண்டாம் தேதி பிறந்த இந்தியப் பிரதமர் யார்?" "மகாத்மா காந்தி" என்று குதித்தான் விஷ்ணு. "பார், பார் அங்குதான் தப்பு. மகாத்மா காந்தி விடுதலைப் போராட்ட வீரர். அவரது பிறந்தநாள், அக்டோபர் இரண்டாயிருந்தாலும் அவர் இந்தியப் பிரதமராயில்லை. நீ அக்டோபர் இரண்டு என்று பார்த்தவுடனே, யோசிக்காமல் எழுதி விட்டாய்," என்று அம்மா கடிந்து கொண்டார்கள். "ஆஹா" என்றான் விஷ்ணு.

"தேன் உறிஞ்சும் பறவை எது?" அம்மா கேட்டார்கள். "வண்ணத்துப் பூச்சி" என்றான் விஷ்ணு உற்சாகமாக. "தப்பு தப்பு, வண்ணத்துப் பூச்சி பறவை இல்லயே. அது பூச்சி இனம் அல்லவா. நீ தேன் சிட்டு என்று எழுதியிருக்கவேண்டும்" என்றுத் திருத்தினார்கள் அம்மா.

"நீ ஒருமுறைக்கு இருமுறை கேள்வியைக் கவனமாக வாசிக்க வேண்டும். அதன் பின்புதான் பதிலெழுத வேண்டும். அப்படியானால் தப்பு செய்ய மாட்டாய்" என்று அம்மா புத்தி சொன்னார்கள். விஷ்ணு தலையை ஆட்டி ஒத்துக்கொண்டான்.

செய்வதிலெல்லாம் கவனம் காட்டினால் நமது வேலை சிறப்பாயிருக்கும்.

41

கொக்கென்று நினைத்தாயோ?

சாது ஒருவர் குளித்துவிட்டு ஆற்றிலிருந்து வெளியேறும்போது கொக்கொன்று அவர் மீது எச்சம் போட்டு விட்டது. கோபமடைந்த அவர் கொக்கை முறைத்துப் பார்த்து தன் சக்தியினால் அதை எரித்துப் போட்டார்.

பிறகு ஒரு வீட்டிற்குத் தர்மம் கேட்டுச் சென்றார். அவ்வீட்டுப் பெண் தன் கணவருக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தார். அதை முடித்துவிட்டு சாதுவுக்கு உணவு கொண்டு வந்தாள். தன்னைக் காக்க வைத்ததற்காய்க் கோபமுற்ற சாது எரிச்சலடைந்து அவளை முறைத்துப் பார்த்தார். அவள் புன்முறுவலுடன், "என்னையும் கொக்கென்று நினைத்துவிட்டீரோ, சாதுவே" என்றாள். தனது தீர்க்கதரிசன சக்தியினால் நடந்ததை அறிந்திருந்தாள்.

ஆன்மீக வல்லமையைப் பெற நாம் உலகை வெறுத்து சாமியார்களாகத் தேவையில்லை. நமது கடமையில் உண்மையுள்ளவர்களாய் இருந்து தெய்வ பயத்துடன் வாழ்வோமானால், கடவுள் நமக்கு ஆன்மீகச் சக்திகளைக் கொடுத்து ஆசீர்வதிப்பார்.

42

மூட நம்பிக்கை

கரடியோடுகூட ஒரு மனிதன் நாற்சந்தியில் நின்று கத்திக் கொண்டிருந்தான்: "வாங்க, வாங்க, ஓடியாங்க. கரடி முடி ஒன்றை மணிக்கட்டில் கட்டிக்கொண்டால் அல்லது உங்கள் மோதிரத்தினுள் அல்லது அலமாரியினுள் வைத்துக் கொண்டால் லட்சாதிபதியாகி விடுவீர்கள். சொத்துக்கள் குவியும். ஓடோடி வாங்க. ஒரு முடி ரூ. 20/ - தான்." மக்கள் முட்டியடித்துக்கொண்டு ஒரு முடியை வாங்கப் போட்டியிட்டனர்.

அப்பாவிடம் தீனு கேட்டான், "அப்பா, ஒரு முடி வாங்கி அலமாரியில் வைக்கலாமா?"



அப்பா சிரித்துக்கொண்டே சொன்னார்: "ஒரு முடியை வைத்துக் கொள்வதினால் நாம் பணக்காரராகிவிடுவோமானால், முழுக் கரடியையே வைத்திருக்கும் அவன் ஏன் பிச்சை எடுக்கிறான்?"

தீனு சிந்தித்தான். ஆம், எதையுமே குருட்டுத்தனமாக நம்பக் கூடாது. கருப்புப் பூனை குறுக்கப் போனால், ஏணியின் அடியில் நடந்தால், வீட்டு வாசலில் தடுக்கிவிட்டால், கெட்ட நாளில் பள்ளிக் கட்டணம் கட்டினால் தீமை நேரிடும் என்று தன் நண்பர்கள் சொல்வதெல்லாம் மூட நம்பிக்கை. இனிமேல் அதையெல்லாம் நம்பப்போவதில்லை என்று தீர்மானித்தான் தீனு.

43

வாணியும் வீணையும்

வாணி தனது தந்தை வாங்கிக்கொடுத்த வீணையை வாசிக்கக் கற்றுக்கொண்டிருந்தாள். இரவும் பகலும் அவளது நினைவு அதுவே. காலையிலும், மாலை பள்ளியிலிருந்து வந்ததும், மறுபடி இரவிலும் பழகுவாள்.

எதிர் வீட்டிலிருந்த அல்லி காலையில் படிக்க உட்கார்ந்ததும் டொய்ங், டொய்ங் என்று வீணை ஒசை கீதமாய்க் காற்றில் மிதந்து வரும். புத்தகத்தை மூடிவிட்டு நாதத்தில் நாட்டம் கொள்வாள். சில சமயம் வாணி பாடவும் செய்வாள். சாயங்காலம் ஹோம்வொர்க் செய்ய அல்லி உட்காரும்போது வீணை ஒசை ஜன்னல் வழியாய் மிதந்து வந்து காதில் தேனாய்ப் பாயும். கையில் திறந்த புத்தகத்துடன், தான் வீணை வாசித்து கூட்டங்களை அசத்துவதாகக் கனவு காண்பாள்.

இதைக் கவனித்த அல்லியின் தந்தை முற்றத்தில் நின்று கத்தலானார், "ஓய், ஏதாவது அறிவு இருக்கிறதா? மகளைக் கண்டித்து வையும். ராவும் பகலும் டொய்ங் டெய்ங் டொய்ங் என்றால் பிள்ளைகள் படிக்க வேண்டாமா?" அல்லியின் அம்மா ஒத்து ஊதினாள், "என்னவோ உம் மகள் பெரிய பாடகியாக்கும். ரொம்பதான் பீத்திக்காதீங்க." வாணியின் பெற்றோர் வெளியே வந்து பதிலடி கொடுத்தனர். "எங்க வீட்ல நாங்க என்ன வேணாலும் செய்வோம். நீங்க யாரு அத கேக்றதுக்கு, ஹுக்கும்."

இந்த வாய்ச் சண்டையை வாணி கவனித்துக் கொண்டிருந்தாள். "இத்தனை சிறிய காரியத்திற்கு இத்தனைப் பெரிய சண்டையா? எப்படிச் சமாதானம் செய்யலாம்?" என்று யோசித்தாள். சாயங்காலம் எதிர் வீட்டிற்கு ஓடிப்போய் அல்லியைக் கட்டி அணைத்துக் கொண்டாள். "அல்லி, நீ எப்போது படிக்கிறாய், சொல்லு," என்று அவள் கேட்க, அல்லி, "ம்ம்ம் ... காலை 6-7, மாலை 7-9" என்றாள். "சரி, ஒன்று செய்கிறேன். அந்த நேரங்களில் நான் வீணை வாசிக்க மாட்டேன். மற்ற நேரங்களில் நான் வாசிப்பதைக் கேட்டால் ஓடி வா; நான் உனக்கு வீணை கற்றுத் தருகிறேன்," என்றாள் வாணி. அல்லியின் கண்கள் அகல விரிந்தன. கைகளைத் தட்டிக்கொண்டு, பெற்றோரிடம் ஓடி "ஐஐஐ, வாணி எனக்கு வீணை கற்றுத்தரப்போகிறாள்" என்றாள். இவர்களது உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த பெற்றோரின் கண்கள் பனித்தன.

அன்பு எதையும் வெல்லும். நமது வசதியை மட்டும் நாம் பார்க்கக்கூடாது. மற்றவர்களையும் அனுசரித்துப் போகவேண்டும்.

44

ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

ஆட்டுக்குட்டி ஒன்று ஓர் ஓடையில் தண்ணீர் பருகிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட ஓநாய் ஒன்று தானும் ஓடைக்குச் சென்றது. எப்படியாவது ஆட்டுக்குட்டியோடு தகராறு செய்ய நினைத்தது. ஆகவே, “நான் தண்ணீர் குடிப்பது உனக்குத் தெரியவில்லையா? ஏன் தண்ணீரைக் கலக்குகிறாய்?” என்றது. ஆட்டுக்குட்டி சாதுவாக, “ஐயா, நீங்கள் மேல்பக்கமாகத்தானே குடிக்கிறீர்கள். உங்கள் பக்கம் இருந்துதானே எனக்குத் தண்ணீர் வருகிறது. நீங்கள் குடிக்கும் தண்ணீரை நான் எப்படி கலக்க முடியும்?” என்றது. “வாயை மூடு” என்றது ஓநாய். “உன் தகப்பன் எனக்கு அதிக தீமை செய்தான்” என்று சொல்லி, குட்டியின்மேல் ஓநாய் பாய்ந்து அதைக் கொன்று போட்டது.



தீயரோடு நியாயம் பேச முடியாது. ஆகவே துஷ்டரைக் கண்டால் தூர விலகு.

45

அப்பா சென்ற பரதீசு

அப்பாவிற்குப் புற்றுநோய் என்று சொல்லப்பட்டபோது ஷைனிக்கு வயது எட்டு. வேதனையான அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அதன் பிறகு கொடுக்கப்பட்ட கதிர்வீச்சு சிகிச்சை அவரை இன்னும் பலவீனமாக்கியது. அதற்குப் பிறகும் புற்றுநோய் பரவி அவர் இரண்டு ஆண்டுகளில் இறந்து போனார்.

ஷைனி அழுது, அழுது, ஆண்டவரிடம், "என் அப்பாவை ஏன் எடுத்துக் கொண்டீர்கள்" என்று கேட்பாள். ஒருநாள் கனவில் கடவுள் ஒரு திரைச்சீலையை விலக்கினார். அங்கே மிக அழகிய, அருமையான, அற்புதமான ஓரிடத்தை ஷைனி கண்டாள். அங்கே அவளுடைய தகப்பனார் மகிழ்ச்சியாக ஆண்டவரைத் துதித்துக் கொண்டிருந்தார். "ஆண்டவரே, இந்தப் பரதீசுக்கு நானும் வரலாமா?" என்று கேட்டாள் ஷைனி. "இப்போதில்லை" என்றார் கடவுள். "உன்னுடைய நேரம் வரும்போது உன்னைக் கூப்பிடுவேன். இப்போதைக்கு, உன் அப்பா எவ்வித வலி வேதனையின்றி என்னோடிருக்கிறார் என்று அறிந்து சந்தோஷமாயிரு" என்றார். அதன் பிறகு ஷைனி துக்கமாயில்லை.

அருமையான ஒருவரை நீ இழந்திருப்பாயேயானால் அவர்கள் மேன்மையான இடத்தில் இருப்பதால் சந்தோஷமாயிரு. ஒரு மாபெரும் நாளில் அவர்களைச் சந்திப்போம்.

46

பாரம்

ஜாம்நகரில் குருவி ஒன்று வசித்து வந்தது. அதற்கு ஒரு விநோதமான ஆசை வந்தது. தன் முதுகில் ஒரு சிறு பையைக் கட்டிக் கொண்டு தான் காண்போரின் மனப்பான்மைகளை எல்லாம் சேகரிக்கத் துவங்கியது. ஒருவரிடமிருந்து கோபம், இன்னொருவரிடமிருந்து பொறாமை இன்னும் எரிச்சல், பேராசை, பழிவாங்குதல், பெருமை போன்று.

பை நிறைந்தது. நாளடைவில் குருவிக்கு முன்போல் இலகுவாகப் பறக்க முடியவில்லை. துக்கத்தோடு தாழ்ந்த கிளை ஒன்றில் உட்கார்ந்திருந்தது.

ஒருநாள் தன் சிநேகிதனாகிய நாயோடு விஷயத்தைப் பகிர்ந்து கொண்டது. “இது என்ன பை? அதை ஏன் சுமந்து திரிகிறாய்? அதனால்தான் உனக்கு பறக்க முடியவில்லை என்று நினைக்கிறேன்” என்றது நாய். “ஊஹூம். அது ஒரு சிறிய பைதானே” என்றது குருவி. “சொல்வதைக் கேள். பையை எறிந்துவிட்டு முயற்சி செய்துபார்” என்றது நண்பன்.

“சரிதான்” என்று சொன்ன குருவி, கோபத்தைத் தூக்கி எறிந்தது. சற்று இலகுவாகத் தெரிந்தது. பின் எரிச்சல், பொறாமை என்று ஒன்றொன்றாகத் தூக்கி எறிந்தது. உயர சிறகடித்துப் பறந்து வட்டமிட்டு தன் நண்பனுக்கு நன்றி சொன்னது.

அருமைப் பிள்ளையே, புரிகிறதா? கெட்ட மனப்பாங்குகள் உன்னைக் கீழே அழுத்தும். அன்பு, சந்தோஷம், சமாதானம், பொறுமை, தயவு, நற்குணம், நம்பிக்கை, சாந்தம், தன்னடக்கம் போன்ற நல்ல மனப்பான்மைகள் உங்களை மேகங்களுக்கு மேலே பறக்கச் செய்யும்.

47

குழாயை அடைத்தது என்ன?

ராயனது குடும்பம் ஓர் ஊரில் சமாதானமாக வாழ்ந்து வந்தது. குளிர்சாதனப் பெட்டி, துவைக்கும் இயந்திரம், கேஸ் அடுப்பு போன்ற அனைத்து வசதிகளும் அவர்களுக்கு இருந்தன. ஆனால் ஒருநாள் ராயன் குளியலறைக்குச் சென்றபோது குழாயில் தண்ணீர் வரவில்லை. என்னென்னவோ செய்து பார்த்தார், பயனில்லை. அலுவலகத்திற்கு நேரமாகிவிட்டது. அவரது மனைவியும் புறப்பட்டுப் பின்னர் பிள்ளைகளையும் பள்ளிக்கு அனுப்பவேண்டும். என்ன செய்வது? குளிக்காமல் எல்லாரும் வீட்டைவிட்டு வெளியேறினர்.



சாயங்காலம் குழாய் சரிசெய்பவருடன் ராயன் வீட்டிற்கு வந்தார். அவர் வேலையைத் துவங்கினார். ஐந்தே நிமிடத்தில் தடதடவென்று குழாயிலிருந்து தண்ணீர் வெளியேறும் சத்தம் கேட்க அவர் குளியல றையிலிருந்து சிரித்துக் கொண்டே வெளியே வந்தார். குழாய்க்குள் ஒரு தவளை இருந்தது.

சிலவேளை ஒரு சிறு தவளை, ஒரு சிறு பாவம், கடவுளிடமிருந்து நமக்கு கரை புரண்டு ஓடிவரும் ஆசீர்வாதங்களைத் தடுக்கக் கூடும். சிறு தவளைகளுக்கு உங்கள் வாழ்வில் இடமளிக்காதீர்கள்.

48

மாற்றம்

ஷாலினி பத்து வயது நிரம்பிய இனிமையான பெண். பெற்றோர் அவளைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர். அவளது அலமாரியை விலையுயர்ந்த ஆடைகளால் நிறைத்தனர்; அவைகளோ பயன்படுத்தப்படவில்லை. அவை பிடிக்கவில்லை என்று சொல்லி ஷாலினி விசிறியடிப்பாள்.

ஒரு நாள் டிவி பார்த்துக்கொண்டிருக்கையில், மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்ற கழுத்தளவு தண்ணிரில் தடுமாறிச் செல்வதைக் கண்டு அதிர்ச்சியுற்றாள். அவர்கள் காப்பாற்றப்பட்டபோது குளிரில் நடுங்கினர். அவர்கள் பராமரிப்பு மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களுக்குத் துவட்டத் துண்டோ, மாற்ற உடையோ இல்லை. பசியோடு நடுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தனர்.

அம்மா விளக்கினாள்: "சென்னையில் வெள்ளம். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துவிட்டனர். அவர்கள் உடைகளை எல்லாம் இழந்துவிட்டனர்." ஷாலினிக்கு நெஞ்சில் வலித்தது. சில வாரங்களுக்கு முன்தான் ஆயர் சொன்னது நினைவிற்கு வந்தது: "தேவையிலுள்ளோருக்கும் துன்புறுவோருக்கும் செய்யும் உதவி இயேசுவுக்கே செய்ததாகும்." அன்றிரவு அவளுக்குத் தூக்கமில்லை. அந்தக் காட்சிகள் அவள் மனத்திரையில் ஓடிக்கொண்டே இருந்தன— பிள்ளைகள் பாலுக்காக அழுவதும் மக்கள் குத்தவைத்து உட்கார்ந்திருப்பதும்!

மறுநாள் சென்னைக்கு ஒரு லாரி நிவாரணப் பொருட்களைக் கொண்டுச் செல்வதாகவும் இயன்றதைக் கொண்டு வரும்படியாகவும் தலைமை ஆசிரியை பிள்ளைகளிடம் கோரினார். ஷாலினி வீட்டிற்கு வந்ததும் அலமாரியைத் திறந்தாள். "அம்மா, இந்த உடைகளை சென்னை மக்களுக்குக் கொடுத்துவிட விரும்புகிறேன்" என்று அம்மாவிடம் கூவினாள். அம்மா உள்ளே வந்து, "சரி மகளே, நீ தாராளமாகக் கொடுக்கலாம். ஆனால் தற்போது அவற்றிற்குப் பதிலாக வேறு வாங்க இயலாது" என்றாள்.

ஷாலினி ஐந்து நிமிடங்கள் யோசித்தாள். அம்மா போய்விட்டார்கள். உடைகளை எடுத்து மூட்டை கட்டினாள். தனக்கென்று மூன்று வைத்துக் கொண்டாள். மறுநாள் தன் உடைகளை ஆசிரியையிடம் கொடுத்தாள். மூன்று ஆடைகளோடு சமாளித்தாள். வண்ணான் வெளுத்துத் தேய்த்துக் கொண்டுவர ஒரு வாரம் ஆகுமாதலால் தன் துணிகளைத் தானே துவைத்துக் கொண்டாள். அதே துணிகளைப் போட்டுப் போட்டு அலுத்துத் போகும்போது, எனக்கு மூன்றாவது இருக்கிறதே. சிலருக்கு ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்வாள்.

இரண்டு மாதங்கள் கழித்துப் பெற்றோர் உடைகள் சில வாங்க கடைக்கு அழைத்துச் செல்ல முன்வந்தனர். “இல்லை அம்மா, இல்லை அப்பா, நாம் பாதிக்கப்படும்வரை கொடுக்கவேண்டும். அப்படித்தான் ஆயர் சொன்னார்கள். அதே உடையை அணிந்து அலுத்துப்போகும் போதெல்லாம், துவைக்கும்போதெல்லாம் ஏழைகளை நினைத்து அவர்கள் வேதனையை உணருகிறேன். இப்போதைக்கு எனக்குப் புது உடைகள் தேவை இல்லை. கஷ்டப்படுபவர்களுக்குக் கொடுத் திருக்கக்கூடிய அதிக பணத்தை வீணாக்கிவிட்டோம். எளிமையான வாழ்க்கை வாழ்வோம்” என்றாள் ஷாலினி. அம்மா, அப்பா வெட்கித் தலைகுனிந்தனர்; அவர்கள் வெள்ள நிவாரணத்திற்கு ஒன்றும் கொடுக்கவில்லையே!

ஏழைகளுக்கும் தேவையில் உள்ளோர்க்கும் கொடுப்பீர்களானால் இயேசு தமது வலது பக்கத்தில் உங்களை நிறுத்துவார்.

49

KFC

கர்னல் ஹார்லண்டு சான்டர்ஸ் தன் 65ஆவது வயதை எட்டியபோது, பல ஆண்டுகளாக ஒரு உணவகம் நடத்தி வந்தும், கையில் காசில்லாமல் நின்றார். அவருக்கு இருந்ததெல்லாம் ஒரு ஓட்டைக் காரும் தன் தாயின் கோழிக்கறி செய்முறையுமே. பணி ஓய்வும் பெற்றுவிட்டார். தன் சொந்த இடத்தில் ஒவ்வொரு உணவகமாகச் சென்று கதவைத் தட்டினார். ஆனால் அவருக்குக் கைகொடுக்க யாரும் முன்வரவில்லை.

தனது காரில் வெவ்வேறு உணவகங் களுக்குப் பயணித்து உரிமையாளர்களுக்கு தனது வறுத்த கோழி சமையலை அவர்கள் முன்னிலையிலேயே சமைத்துக் காட்டினார். உரிமையாளருக்கு அது பிடித்ததானால் உணவகத்தில் அது விற்கப்படும். முதலாவது வாசல் திறக்கும் முன்பாக அவருக்கு 1009 கதவுகள் அடைக்கப்பட்டதாக சரித்திரம் கூறுகிறது. அவரது வறுத்த கோழி ஏற்றுக்கொள்ளப்படுமுன்பாக ஆயிரத்து ஒன்பது முறை நிராகரிக்கப்பட்டது.

ஒவ்வொரு கோழித்துண்டு விற்பனையாகும்போதும் உணவகம் சான்டர்சுக்கு ஒரு காசு அளிக்கும் என்பதே ஒப்பந்தம். 1964ற்குள் 600 உணவகங்களில் அவரது கோழி வறுவல் விற்பனையாகத் தொடங்கியது. இச்சமயம் அவர் தமது நிறுவனத்தை 2 மில்லியன் டாலர்களுக்கு விற்றுவிட்டார். 1976ஆம் ஆண்டு உலகிலேயே பிரபல்யமானவர்களில் இரண்டாமவராக அறிவிக்கப்பட்டார்.

அனேகர் ஓய்வெடுக்கத் துவங்கும் 65ஆவது வயதில் ஒரு மனிதன் தனது கென்டகி ஃபிரைட் சிக்கன் என்ற வறுத்த கோழி மூலமாக உலகப் பிரசித்தி பெற்றது எத்தனை ஆச்சரியம்!

"நம்புங்கள். கனாக் காணுங்கள். முயற்சி செய்யுங்கள். வெற்றி பெறுங்கள். வயது தடையில்லை!"

50

போராயுதங்கள்

அன்னை தெரசா ஒருமுறை அமெரிக்காவிற்குச் சென்றார். நியூ ஜெர்சி விமான நிலையத்தில் கண்காணிக்கும் இடத்திற்குச் சென்றார். பணியிலிருந்த அதிகாரி அன்னாரிடம் ஏதேனும் ஆயுதங்கள் உண்டா என்று கேட்க அன்னையும், "ஆம்" என்றார்கள்.

திகைத்துப் போன அதிகாரி என்ன ஆயுதங்கள் என்று கேட்டார். "என் பையிலுள்ள ஜெப புத்தகமும், இதயத்திலுள்ள மற்றவர்களுக்கான அன்பும்" என்று பதிலளித்தார் அன்னை தெரசா.

எந்தப் போரையும் எவரையும் ஜெபத்தினாலும் அன்பினாலும் வெல்லலாம் என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

51

ஆசீர்வாதமான விபத்து

படகோட்டி ஒருவர் படகிலேயே உலகைச் சுற்றி வந்து சாதனை படைக்க விரும்பினார். துக்ககரமாக புயல் தாக்கி அவரது படகு நொறுங்கிப் போனது. படகோட்டி நீந்தி ஆள் ஆரவாட்டமற்ற ஒரு தீவில் கரைசேர்ந்தார். காட்டுக் கனிகளையும் கிழங்குகளையும் சாப்பிட்டு உயிர்வாழ்ந்தார். குச்சிகளையும் காய்ந்த இலைகளையும் கொண்டு ஒரு குடிசையை உருவாக்கிக் கொண்டார். கடவுள் தன்னை எப்படியாவது காப்பாற்றி, குடும்பத்தோடு சேர்க்க வேண்டிக்கொண்டே இருந்தார்.

ஒருநாள் தான் பிடித்த முயலொன்றைச் சமைப்பதற்காக மிகவும் சிரமத்தோடு இரண்டு கற்களையும் சருகுகளையும் கொண்டு நெருப்பை உண்டாக்கினார். ஆனால் சமைத்துக்கொண்டிருந்தபோது பறந்த தீப்பொறிகள் குடிசையைத் தீக்கிரையாக்கின. நெருப்பும் புகையும் வானத்திற்கு எழும்பின.

அம்மனிதன் உருக்குலைந்து போனான். "ஐயோ, கடவுளே! உமக்கு இரக்கமே இல்லையா? எத்தனை கஷ்டப்பட்டு இக்குடிசையைக் கட்டினேன். இப்போது என்ன செய்வேன்? ஏன் எனக்கு இப்படிச் செய்தீர்" எனப் புலம்பித் தீர்த்தான். தீ அணைந்தபோது உடைந்துபோன அம்மனிதன் சாம்பலைக் கண்டு அழுதான். பின்பு கடற்கரைக்கு முகத்தைக் கழுவச் சென்றான். தன் கண்களை அவனால் நம்பவே முடியவில்லை. கப்பலொன்று தீவை நெருங்கி வருவதைக் கண்டான். நீந்தி வந்து கப்பலேறும்படி அவனுக்கு சைகை காட்ட அவனும் நீந்திச் சென்று கப்பலில் ஏறி தன் கதையைச் சொன்னான். அவர்கள் படகோட்டியிடம் தாங்கள் எப்படி தீவிலிருந்து புகை மேலெழுவதைக் கண்டு, யாரோ ஆபத்தை அறிவிக்கின்றனர் என்று எண்ணி தீவை நெருங்கி வந்ததாகக் கூறினார்கள்.

"கடவுளே, உமக்கு நன்றி" என்று அம்மனிதன் ஆர்ப்பரித்தான். தனக்கு விரோதமாகச் செயல்படுவதாகக் கடவுளைக் குற்றம் சாட்டிய தற்காக கடவுளிடம் மன்னிப்புக் கோரினான்.

உங்களுக்குச் சிறந்தது எது என்று கடவுள் அறிவார். கடவுளை நேசிப்பவர்களுக்கு எல்லாம் நன்மைக்காகவே நடக்கும்.

52

குற்றம்

அரசி எலிசபெத்தின் பிறந்தநாள் விழாவிற்கு எல்லா பணியாளருக்கும் விருந்துபண்ணும்படித் தடபுடலாக ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மேசை முழுவதும் பற்பல விதமான உணவுகள். எல்லோரும் விருந்துண்டு இனிப்பு சாப்பிட ஆயத்தமாயினர். அந்த நேரத்தில், வழக்கம்போல மேசை சுத்தம் செய்யப்பட்டு பாத்திரங்களும் கரண்டிகளும் எண்ணப்பட்டன. ஒரு சிறிய வெள்ளிக்கரண்டி காணவில்லை. எல்லாப் பணியாளரும் சோதிக்கப்பட்டனர்.

எல்லாரது ஜேப்பும் துளாவப்பட்டன. ஒருவர் மட்டும் தான் சோதிக்கப்பட ஒத்துக்கொள்ளவில்லை. கெஞ்சிக் கூத்தாடியும் அவர் சோதனைக்குட்பட மறுத்துவிட்டார். விருந்து மகிழ்ச்சிகரமாக முடிந்தது. ஆனால் மறுநாள் அப்பணியாளர் பணிநீக்கம் செய்யப் பட்டார்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதே அறையில் அந்தச் சிறிய வெள்ளிக்கரண்டி கண்டெடுக்கப்பட்டது. அந்த மனிதன் அழைக்கப் பட்டு, ஏன் சோதனைக்கு மறுத்துவிட்டான் என்று கேட்டனர். அவனது பதில் எல்லா உள்ளங்களையும் நெகிழச் செய்தது. அவன் சொன்னது, "என் மனைவி நோய்வாய்ப்பட்டு வீட்டிலிருந்தாள். அவளுக்காக இரண்டு கோழித் துண்டுகளை நெகிழியில் சுற்றி ஜேப்பில் வைத்தி ருந்தேன்."

யாரையும் அவசரப்பட்டு குற்றம் சாட்டாதீர்கள்.

53

பெரியவரும் சிறியவரும்

பெரிய பூஜ்யம் ஒன்றுடன் ஒரு சிறிய பூஜ்யம் மோதிவிட்டது. "உனக்கு அறிவிருக்கிறதா? உன்னோடு நான் எவ்வளவு பெரியவன் என்று தெரியவில்லயா? வெட்கங்கெட்டவனே" என்று திட்டியது பெரிய பூஜ்யம்.

சிறிய பூஜ்யம் பொறுமையாகப் பதிலளித்தது, "இதில் வெட்கப்பட என்ன இருக்கிறது? நீ பெரியவனாயிருந்தால் என்ன? நான் சின்னவனாயிருந்தால் என்ன? நமது மதிப்பு ஒன்றுதானே!"

இதில் ஒரு பெரிய உண்மை இருக்கிறது. நாம் ஒஸ்தியாக உணரலாம். ஆனால் கடவுளது பார்வையில் நாம் அனைவருமே ஒன்றுதான். யாரையும் நாம் குறைவாக எண்ணக்கூடாது. நாமும் பெரியவர்களைச் சந்திக்கும்போது நம்மைக் குறைவாக நினைக்கக்கூடாது. நம்மில் நாம் பெருமதிப்பு உள்ளவர்கள்தான்.

54

வெட்டுக்கிளியும் எறும்பும்

கோடைகால வெயில் அருமையாகப் பிரகாசித்துக் கொண்டிருந்ததால் வெட்டுக்கிளி ஒன்று வயலில் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் கும்மாளம் போட்டுக்கொண்டிருந்தது. எறும்பு ஒன்று அரிசி ஒன்றைப் பாடுபட்டுச் சுமந்து சென்றதைப் பார்த்தது.



"வா, கதை பேசலாம். கொஞ்சம் விளையாடலாம். காலநிலை நன்றாக இருக்கிறது" என்று வெட்டுக்கிளி எறும்பை அழைத்தது. "எனக்கு வேலை இருக்கிறது. நான் குளிர்காலத்திற்குச் சேமித்து வைக்கவேண்டும். ஏன் இப்போது விளையாடுகிறாய்? என்னோடு வா, குளிர்காலத்திற்கு உணவு சேகரிக்கலாம்" என்றது எறும்பு.

"நான் கவலையே படமாட்டேன். இப்போதைக்கு உணவு இருக்கும் போது கவலை ஏன்?" என்றது வெட்டுக்கிளி. அரிசியைச் சுமந்து கொண்டு எறும்பு சென்றுவிட்டது.

குளிர்காலம் வந்தது. குளிர் வாட்டியது. உணவும் கிடைப்பதாயில்லை. வெட்டுக்கிளிக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. எறும்புகள் தங்கள் வீட்டில் விருந்துண்பதைக் கண்டது. நன்றாக உணவருந்தி குளிரின்றி இருந்தன எறும்புகள். குளிர்காலத்திற்குச் சேமிக்காததன் முட்டாள்தனத்தை உணர்ந்தது வெட்டுக்கிளி.

இருக்கிற பணத்தை எல்லாம் செலவழிக்காதீர்கள். கடினமாக உழைத்து எதிர்காலத்திற்குச் சேமித்து வையுங்கள்.

55

நிமிடங்களை எண்ணுங்கள்!

கிறிஸ்லர் கார்பரேஷன் என்ற அமெரிக்க நிறுவனம் ஒன்று நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருந்தது. இயாகாகோ என்ற மனிதன் அதன் நடத்துனராகி அதை லாபத்தில் நடத்தினார். ஒருமுறை பங்குதாரர் கூடுகைக்கு அவர் எட்டு நிமிடங்கள் தாமதமாக வந்தார். அவர் மன்னிப்புக் கோரிவிட்டுச் சொன்னார், "இந்தக் கூடுகைக்கு நிமிடம் ஒன்றிற்கு 250 டாலர்கள் செலவழிக்கப்படுகிறது என்று இங்கு வருமுன் கண்டறிந்தேன். நான் எட்டு நிமிடங்கள் தாமதமாக வந்ததால் நான் 2000 டாலர்கள் நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டேன். அதை என் சம்பளத்திலிருந்து செலுத்திவிடுகிறேன். என்னால் நிறுவனத்திற்கு இழப்பு ஏற்படக்கூடாது. அதுபோல இனிமேல் யாராவது பிந்தி வருவீர்களானால் இந்தச் சட்டமே கடைபிடிக்கப்படும்."

நிமிடங்களை நாம் எண்ணாவிடில் நமக்கும் மற்றவர்களுக்கும் இழப்பு ஏற்படுத்துகிறோம்.

56

வெற்றியின் இரகசியம்

பிரான்சுக்கு அமெரிக்கப் பிரதிநிதியாக பெஞ்சமின் ஃபிராங்க்ளின் நியமிக்கப்பட்டார். பணியில் ஜொலித்தார். அவரது சாதனைகளைக் கண்டு வியந்தவர்கள் கேட்டனர், "உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன?"

ஃபிராங்க்ளின் பதிலளித்தார்: "நான் யாரைக் குறித்தாவது பேசவேண்டுமானால், அவர்களது நல்லவைகளை மட்டுமே பேசுவேன். அவர்களது தோல்விகளையோ தீயவைகளையோ குறித்துப் பேசவே மாட்டேன்."

யாரைக் குறித்தும் தீது பேசாதீர்கள். பிறரிடம் நன்மை ஏதாவது உண்டானால் அதைப் பேசலாம். இல்லையேல் அமைதியாயிருங்கள். அதுவே உங்கள் வாழ்க்கையின் வெற்றிக்கு வழிவகுக்கும்.

57

எந்த வேலையும் என் வேலைதான்!

பணக்காரர் ஒருவர் வெளியே போவதற்குப் பல்லக்கு ஒன்று வைத்திருந்தார். அதைச் சுமக்கப் பணியாட்கள் இருந்தனர். அவரிடம் விலையுயர்ந்த செல்ல நாய் ஒன்றும் இருந்தது. அது அன்பும் நன்றியும் நிறைந்தது. அவர் அந்த நாயை மிகவும் நேசித்தார்.

ஒரு நாள் அந்த நாய் காணாமல் போனது. வீடு, தோட்டமெல்லாம் தேடியும் கிடைக்கவில்லை. பல்லக்கு சுமக்கும் பணியாட்களைக் கூப்பிட்டு, அவர், "நேற்று நான் ஊருக்குள் போனபோது ஒருவேளை நாய் என் பின்னே வந்திருக்கும். நாயை ஊருக்குள் தேடிவாருங்கள்" என்றார்.

அவர்களோ, "எங்கள் வேலை பல்லக்கு தூக்குவது. நாயைத் தேடுவதல்ல" என்று சொல்லிவிட்டனர். "சரிதான்" என்று சொன்ன செல்வந்தன் பல்லக்கில் ஏறி உட்கார்ந்து கொண்டு, "நான் நாயைத் தேடுகிறேன். நீங்கள் பல்லக்கைத் தூக்குங்கள்" என்றார். வேலையாட்கள், மூச்சு வாங்க வாங்க, நாய் கிடைக்கும் வரை ஊரெங்கும் அவரைத் தூக்கிச் சுமந்தனர்.

எந்த வேலையும் என் வேலை என்ற பொறுப்புணர்வு அவசியம்.

58

டாக்டர் ஜீகைலும் திரு. ஹைடும்

ஹைடு என்பவர் ஒரு பெண்ணை மிதித்துப் போட்டு, தெருவிலிருந்த ஒரு வாசலுக்குள் சென்று மறைந்தார். ஓர் ஆண்டு கடந்தது. அதே ஹைடு வயதான ஒருவரைக் கொடூரமாக அடித்துக் கொல்வதை ஒரு பணிப்பெண் ஓர் இரவில் கண்டாள். ஹைடு அவர்களது கையெழுத்து, அவ்வூரிலிருந்த டாக்டர் ஜீகைலுடைய கையெழுத்தைப் போலவே இருப்பதை ஒருவர் சுட்டிக்காட்டினார். டாக்டர் ஜீகைல் எப்பொழுதெல்லாம் இல்லையோ அப்பொழுதெல்லாம் திரு. ஹைடு தலைகாட்டுவதை காவலர் கவனித்து ஆராயத் துவங்கினர்.

ஒரு நாள் காவலர் டாக்டர் ஜீகைலைச் சந்திக்கச் சென்றபோது, அவரது பணியாளர்கள் பயந்து நடுங்கி ஒரு மூலையில் ஒடுங்கியிருந்ததைக் கண்டனர். கதவைத் தட்டியும் சலனமில்லாததால் டாக்டர் ஜீகைலது அறைக் கதவை உடைத்துத் திறந்தனர். அங்கே அவர்கள் கண்டது என்ன? டாக்டர் ஜீகைலின் உடையில் திரு. ஹைடின் உடல் கிடப்பதைக் கண்டனர்.

ஹைடாக மாறுவதற்கு டாக்டர் ஜீகைல் ஒரு கஷாயத்தைக் குடித்து வந்தார். டாக்டர் ஜீகைல் ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தார். அவரது நல்ல பகுதியையும் தீய உணர்வுகளையும் வேறு பிரிக்க அவர் எடுத்த முயற்சிகள் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன. அவ்வப்போது அந்தக் கஷாயத்தைக் குடித்து கொடூர மனிதனாக மாறுவார்.

நாளடைவில் இம்மாறுதலுக்கு இன்னும் இன்னும் அதிகமாகக் கஷாயம் தேவைப்பட்டது. அதன் பின்பு கஷாயம் குடிக்காமலேயே கொடூர மனிதனாக மாறத் துவங்கினார். இது வர வர அடிக்கடி நிகழ ஆரம்பித்தது. காவலர் ஹைடைத் தேடி வந்த நிலையில் ஹைடு தான் ஒருநாள் நிரந்தரமாக ஹைடாகவே மாறிவிடுவோம் என்று நிச்சயமாய் அறிந்து, பயந்து, தற்கொலை செய்துகொண்டார்.

நம் எல்லாருக்குள்ளுமே ஒரு நல்ல மனிதனும் ஒரு தீய மனிதனும் இருக்கிறான். கொஞ்சம் கொஞ்சமாக நாம் அந்தத் தீய மனிதனைச் சாகடிக்க வேண்டும். வீட்டில் ஹைடாகவும் வெளியில் டாக்டர் ஜீகைலாகவும் நடமாடக் கூடாது. வீட்டிலோ, பள்ளியிலோ, அக்கம் பக்கத்திலோ, சமுதாயத்திலோ அதே நல்ல மனிதனாக இருக்க வேண்டும்.

59

பூனையும் யானையும்

ஒரு காட்டில் ஒரு பூனையும் ஒரு யானையும் நண்பர்களாய் இருந்தனர். ஒருநாள் ஓர் எலியைத் துரத்திக்கொண்டுப் போகும்போது வழுக்கி ஆழமான குழி ஒன்றில் பூனை விழுந்தது. பூனையின் சத்தத்தைக் கேட்ட யானை ஓடோடி வந்து பூனையைத் தூக்கி விட்டுச் சொன்னது: "என் கால்கள் இரும்புத் தூண்கள் போன்றவை. நான் வழுக்கி விழுவதே இல்லை." பூனை சொன்னது: "நீ வழுக்கி விழுந்து என்னுடைய உதவி தேவைப்படும் காலமும் வரலாம். ஜம்பமடிக்காதே." "பூனையாவது யானைக்கு உதவி செய்வதாவது?" என்று சிரித்தது யானை.

ஒரு நாள் யானை, பெரிய குழியொன்றின் மேல் மூங்கில்கள் அடுக்கி அதன்மேல் இலைகள் பரப்பப்பட்டிருந்ததை அறியாமல் அதில் கால்மிதித்து குழியில் விழுந்தது. வேட்டைக்காரரின் வலையில் விழுந்த யானையின் சத்தத்தைக் கேட்ட பூனை ஓடோடி வந்தது. இலைகளையும் மண்ணையும் அவசரமவசரமாகக் குழிக்குள் தள்ளியது. சாயங்காலம்வரை கடுமையாக உழைத்தது. வேட்டைக்காரர் வரு முன்பாக யானை குழியிலிருந்து வெளியேறி வந்தது.

“யானைக்கும் அடிசறுக்கும் என்பதை அறிந்துகொண்டேன். நான் சொன்னதற்கு என்னை மன்னித்துவிடு” என்றது யானை.

யாரும் எப்பொழுது வேண்டுமானாலும் சறுக்கி விழலாம், தோல்வி அடையலாம். நமது நற்குணத்தையும் சாதனைகளையும் குறித்து நாம் பெருமையடிக்கவே கூடாது.

60

வசனத்தின் வல்லமை

வாலிபனொருவன் படைக்குச் சென்றான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படி அவனது தாய் கெஞ்சினாலும் அவனுக்கு மனதில்லாமல் போயிற்று. அவள் அவனுக்கு ஒரு புதிய ஏற்பாட்டைக் கொடுத்து, அதை எப்பொழுதும் ஜேப்பில் வைத்திருந்து நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிக்கச் சொன்னாள். அவன் தன் ஷர்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டாலும் அதைப் படிக்கவே இல்லை.



எதிரியைத் தாக்க அவனது படை சென்றது. குண்டுகள் பறந்தன. திடீரென்று ஒரு குண்டு அவனது மார்பில் பட்டதில் அவன் கீழே விழுந்தான். தான் மரித்துவிட்டோம் என்று நினைத்தான். அதிர்ச்சி அடைந்தானேயொழிய வலி தெரியவில்லை. அவன் மெதுவாக, மயக்கமாக எழுந்து உட்கார்ந்து நடந்ததை அறிந்தான். அந்த குண்டு, புதிய ஏற்பாட்டைத் துளைத்துச் சென்று அதனுள் தங்கிவிட்டது. தன் உயிரைக் காத்தப் புதிய ஏற்பாட்டை பயபக்தியோடு திறந்தான். அந்த குண்டு யோவான் 3:16இல் வந்து நின்றிருந்தது.

"கடவுள் தம்முடைய ஒரே மகனாகிய இயேசு கிறிஸ்துவை நம்புகிறவன் எவனோ, அவன் நரகத்திற்குப் போகாமல் மோட்சத் திற்குப் போகும்படியாக, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." அங்கேதானே, போர்க்களத்தில் மண்டியிட்டு, இயேசுவைத் தனது இதயத்தில் ஏற்றுக்கொண்டான்.

கடவுளது வார்த்தையை அனுதினமும் வாசிக்க மறக்கக் கூடாது. அது நரகத்திற்குப் போகாமல் உங்களைக் காப்பாற்றும்.

61

ஷாஜஹானின் யுக்தி

தாஜ்மஹாலைக் கட்டுவதற்கு ஷாஜஹான் அதிகமான நேரத் தையும் பணத்தையும் உழைப்பையும் செலவழித்தார். கட்டிடம் முடிந்த பிறகு மிகுதியான சாரக்கட்டு அகற்றப்பட வேண்டியதாயிருந்தது. சாரக் கட்டை அகற்ற எத்தனை காலம் பிடிக்கும் என்று பணியாளர்களை மன்னர் கேட்டார். அவர்கள், "ஆறு மாதங்கள்" என்றனர். "சாரக் கட்டைப் பிரித்து யார் யாருக்கு எவ்வளவு வேண்டுமோ எடுத்துக் கொள்ளலாம்" என்று ஷாஜஹான் ஆணை பிறப்பித்தார். இரவின் இருள் சூழுமுன்பாக சாரக்கட்டு அனைத்தும் மறைந்தது.

நாமும் தன்னலக்காரர்தானே? நமக்கு என்றால் மாய்ந்து மாய்ந்து செய்வோம். ஆனால் ஆசிரியரோ பிறரோ ஒரு வேலை கொடுத்தால்

எத்தனை கரிசனையோடும் சுறுசுறுப்போடும் செய்கிறோம்? பள்ளியிலும் வீட்டிலும் நமது வேலையை எப்படிச் செய்கிறோம்?

62

வலிக்கும் அடிகள்

ஜாஷுவாவும் ஷர்லியும் அருமையான பிள்ளைகள். ஜாஷுவா விற்கு வயது எட்டு, ஷர்லிக்கு ஏழு. அவர்களது பெற்றோர் ஆப்பிரிக்கா விற்கு வேலையாகச் சென்றதால், அவர்களது படிப்பு கெடாதபடி சித்தியிடம் விட்டுச் சென்றனர்.

சித்தி இருவருக்கும் வேதம் கற்பிப்பார். ஆனால் இருவரும் ஒருவரையொருவர் திட்டிச் சண்டை போட்டுக்கொண்டே இருப்பர். "போர்வைக்கும் தலையணைக்கும் ஏன் சண்டை போடுகிறீர்கள்? யாராவது உன் கோட்டைப் பிடிங்கிக்கொண்டால் உன் ஷர்டையும் கொடுத்துவிடு என்றுதானே இயேசு கற்பித்தார். ஆகவே விட்டுக் கொடுக்கக் கற்றுக்கொள்ளுங்கள்" என்று சித்தி சொல்வார். உடனே ஜாஷுவா, "ஆமாம், இப்போ நான் போர்வையை எடுத்துக் கொண்டேன். அப்போ ஷர்லி எனக்குத் தயைணையையும் கொடுக்க

வேண்டும், அப்படித்தானே?" என்பான். போதனையைத் தங்களுக்கல்ல அடுத்தவருக்கே எடுத்துக் கொள்வர்.

ஒருநாள் சண்டை உச்சக்கட்டத்தை எட்டியது. கைகலப்பை எப்படித் தடுப்பதென சித்தி யோசித்தார். இருவரையும் உட்காரவைத்துச் சொன்னார்: "இப்படிச் சண்டையிட்டால் இருவருக்கும் தண்டனை கொடுக்கப்போகிறேன். ஜாஷுவா, ஷர்லியை அடிக்க ஒரு குச்சி கொண்டுவா. ஷர்லி நீ ஜாஷுவாவை அடிக்க குச்சி கண்டுபிடி." இருவரும் உடனே வேலையில் இறங்கினர். ஜாஷுவா ஒரு பிரம்பைக் கூர்மையாக்கி, ஷர்லிக்கு சுளீரென்று உரைக்குமா என்று தன்னையே அடித்துப் பார்த்துக் கொண்டான். ஷர்லி முள்ளுகளிலிருந்த ஒரு குச்சைத் தெரிந்தெடுத்தாள்.

இருவரும் துன்மார்க்கமாய்ச் சிரித்துக்கொண்டே குச்சியைச் சித்தியிடம் கொண்டு வந்தனர். சித்தி சொன்னார்கள்: "ரொம்ப நல்லது. ஜாஷுவா, நீ கொண்டுவந்த குச்சி உன்னை அடிக்கத்தான். ஷர்லி, உன் குச்சி உன்னைப் பதம் பார்க்கத்தான்." "ஐயையோ" என்றனர் இருவரும்.

உங்களைப் போலவே பிறரை நேசிக்கவேண்டும்.

63

இலவசங்கள்

திரு. அப்துல் கலாம் அவர்கள் ஓர் இலக்கியத் திருவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றினார். அவரது செய்தியால் தொடப்பட்ட நண்பரொருவர், அவருக்கு ஒரு மின்சார ஆட்டுக்கல் பரிசளித்தார். "எனக்கு ஒரு ஆட்டுக்கல் தேவைதான், ஆனால் இனாமாக அதைப்

பெற்றுக்கொள்ள மாட்டேன். அதன் கிரயத்தைச் செலுத்தி எடுத்துக் கொள்கிறேன்" என்றார் திரு. கலாம் அவர்கள்.

திரு. கலாம் அவர்களின் கையெழுத்திடப்பட்ட காசோலையை பயன்படுத்த மனதின்றி, நண்பர் அதைச் சட்டமடித்து சுவற்றில் மாட்டி வைத்தார்.



இரண்டு மாதங்களுக்குப் பிறகு திரு. கலாமவர்களின் அலுவலகம் நண்பரைத் தொடர்பு கொண்டு, ஆட்டுக்கல்லுக்காகக் கொடுக்கப் பட்டக் காசோலையை நீங்கள் பணமாக்கவில்லை. நீங்கள் அதைப் பயன்படுத்தி பணத்தைப் பெற்றுக் கொள்ளாவிடில், புதிதாக இருக்கும் ஆட்டுக்கல்லை உங்களுக்குத் திருப்பி அனுப்பும்படி திரு. கலாம் சொல்லியிருக்கிறார்கள்" என்றனர்.

வேறு வழியின்றி நண்பர் காசோலையைச் செலுத்தி பணத்தைப் பெற்றுக்கொண்டார்.

இங்குதான் திரு. கலாம் அவர்கள் எல்லாரையும் மிஞ்சிவிட்டார். பாடத்தைப் படித்துக்கொள்ளுங்கள்.

64

விநோதத் திருட்டு

வியாபாரி மித்திரன் தனது சரக்குகளை எல்லாம் சந்தையில் விற்றுவிட்டு, பணப்பையுடனும் விற்பனையாகாத பொருட்களுடனும் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் ஒரு சத்திரத்தில் தன் பொருட்களைத் தன்னருகிலும் பணமூட்டையை சுவற்றின் ஒரு வெடிப்பிலும் வைத்துவிட்டுத் தூங்கிப் போனார். விழித்தபோது, பணமூட்டையை மறந்துவிட்டுப் பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு வீடு வந்தடைந்தார்.

திடீரென்று பணமுடிச்சு ஞாபகம் வரவே திரும்பிச் சத்திரத்திற்குச் சென்றார். அங்கே ஓர் அறிவிப்பு தொங்கிக்கொண்டிருந்தது: 'பணமுடிப்பைத் தொலைத்தவர், தகுந்த ஆதாரங்களுடன் பணத்தைப் பெற்றுக் கொள்ளவும்." அதில் கொடுக்கப்பட்டிருந்த முகவரியைச் சென்றடைந்தார். அது துப்புரவுப் பணியாளர் பொன்னையனின் வீடு. மித்திரன் பணப்பை யைப் பெற்றுக்கொண்டார்.



நேர்மையான அந்த எளிய மனிதனுக்குப் பணப்பையைக் கொடுத்துவிட மித்தரன் விரும்பினார். "உங்கள் நேர்மைக்காக இந்தப் பணப்பையை உங்களுக்குப் பரிசளிக்க விரும்புகிறேன்," என்று சொல்லி பொன் னையன் கையில் பணப்பையைத் திணித்து விட்டு மித்தரன் நடைபோட்டார். "உங்கள் பணம் எனக்குத் தேவையில்லை, இந்தாங்கள்," என்றார் பொன்னையன். மித்திரனோ கண்டுகொள்ளாமல் வேகமாய் நடந்தார்.

பொன்னையன், "திருடன், திருடன்," என்று அலறவும், கூட்டம் கூடி மித்திரனைப் பிடித்து, பொன்னையனிடம் வினவினர். "இவ்வளவு நாளாக நான் சம்பாதித்திருந்த நற்பெயரையும் கனத்தையும் இவர் திருடிவிட்டார், என்று பொன்னையன் கூறி நடந்தவற்றை விளக்கினார். மித்திரன் வேறு வழியின்றிப் பணப்பையுடன் வீடு திரும்பினார். மக்கள் பொன்னையனைப் புகழ்ந்தனர். பொன்னையனும் மித்திரனும் நண்பர் களாயினர்.

பண ஆசையே தீயது எல்லாவற்றிற்கும் வேர். அதில் விழுந்து விடாதீர்கள்.

65

நாறின மல்லிகை

கருவாடு வியாபாரி ஒருவர் தன் சரக்கைச் சந்தையில் விற்று விட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார். வழியில் மழை பிடித்துக் கொண்டது. வீடோ ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. இருட்டத் துவங்கியதால் தடுமாறி நின்றார்.

அவருடைய நிலைமையைக் கண்ட இரக்கமுள்ள ஒருவர், தன் வீட்டில் இரவு தங்க அவரை அழைத்தார். சூடான உணவு உண்டு, உறங்கச் சென்றார். இடமளித்தவர் மல்லிப்பூ வியாபாரியாதலால் வீடு முழுவதும் கூடைகளில் இருந்த மல்லி மொட்டுகள் இரவு மலரத் துவங்கி வீட்டை வாசனையால் நிறைத்தன.

காலையில் கருவாட்டு வியாபாரியை, “நன்றாய்த் தூங்கினீர்களா?” என்று விருந்தோம்பியவர் விசாரித்தார். அவரோ, “வீடு துர்நாற்றம் வீசியதால் தூங்க இயலவில்லை” என்றார்.

கருவாட்டு வாசனைக்குப் பழகிப் போனவருக்கு மல்லி மணம் துர்நாற்றமாகத் தெரிந்தது. இப்படித்தான் விடாப்பிடி பாவிகளுக்கும், அசுத்தமும் பாவமும் நிறைந்த பாவ வாழ்க்கையில் ஊறிப்போனவர்களுக்கும் கடவுளது காரியங்கள் வேண்டா வெறுப்பாயிருக்கும்.

66

யானையும் எறும்பும்

முன்னொரு காலத்தில் ஒரு யானையும் எறும்பும் நெருங்கிய நண்பராயிருந்தனர். யானை எப்போதும் எறும்பைக் கேலி செய்யும்: “பொடியா, யாரும் உன்னை நசுக்கிப் போடலாம். என்னைப் பார், எத்தனைப் பெரிய பலவானாய் இருக்கிறேன்.” எறும்பு பொறுமையாய் இருந்தாலும் நாளடைவில் தாழ்வு மனப்பான்மையில் மூழ்கியது. “நான் பயனற்றவன், தெண்டம், அசிங்கமாயிருக்கிறேன், யாருக்கும் என்னைப் பிடிக்கவில்லை, நான் செத்துப்போனால் நலம்,” இப்படிப் பல காரியங்களைச் சிந்திக்கத் துவங்கியது.

ஒரு நாள் இருவரும் ஒரு மலையுச்சியில் நின்று பேசிக்கொண்டிருந்தனர். வழக்கம்போல எறும்பை யானை கிண்டலடித்துக் கொண்டி

ருந்தது. திடீரென்று ஒரு பூகம்பம் வந்தது. இருவரும் மலையுச்சி யிலிருந்து கீழே தூக்கி எறியப்பட்டனர். சரிவில் யானை உருண்டுச் சென்று பொத்தென்று விழுந்தது. மேலே விசிறப்பட்ட எறும்பு மெத்தென கீழே தரைக்கு இறங்கியது.



எறும்பு ஓடிப்போய் யானையைப் பரிசோதித்தது. பல எலும்புகள் முறிந்திருந்த யானையை ஆம்புலன்ஸ் வரவழைத்து மருத்துவமனையில் சேர்த்தது. "நல்ல வேளை நான் யானையாய்ப் பிறக்காமல் எறும்பாய்ப் பிறந்தேனே" என எறும்பு மகிழ்ந்தது.

மற்றவர்கள் உங்களைச் சிறுமைப்படுத்துவதால் ஒருபோதும் தாழ்வெண்ணம் கொள்ளாதீர்கள். இருக்கிற நிலையில் மகிழ்ச்சியாயிருங்கள்.

67

தங்க பிஸ்கெட்

ஏழை மனிதன் ஒருவன் கூலி வேலை செய்து பிழைத்து வந்தான். கடினமாய் உழைத்தாலும் வருமானம் கொஞ்சமாய்த்தான் வரும். ஆனாலும் அவன் மூன்று வேளை உண்டு அயர்ந்து தூங்கினதால் மகிழ்வுடனிருந்தான்.

ஒரு நாள் அவனை சாலை ஓரத்தில் தூங்குவதைக் கண்ட பணக்காரன் ஒருவன் பரிதாபப்பட்டு, தங்க பிஸ்கெட் ஒன்றைப் பரிசளித்தான். எளியவன் அதைப்போல் ஒன்றைப் பார்த்ததும் இல்லை, தன் வாழ்நாளில் விலையுயர்ந்த எதையும் வைத்திருந்ததும் இல்லை.

அதைத் தன் தலையணைக்கடியில் வைத்துக்கொண்டு தூங்க முயன்றான். திருட்டுப் போய்விடுமோ என்ற பயத்தில் தூங்க முடியவில்லை. தன்னோடு அதை வேலைக்கு எடுத்துச் சென்ற

அவன், அது காணாமல் போய்விடுமோ என்று இடைவிடாமல் கவலைப்பட்டான். அவனுக்கு நிம்மதியும் போனது, தூக்கமும் போனது. அந்தத் தங்க பிஸ்கெட்டை பணக்கார னிடம் திரும்பக் கொடுத்துவிட்டு நிம்மதியாகத் தூங்கினான்.



நீங்கள் தேடும் நிம்மதியையும் சந்தோஷத்தையும் பணம் தராது. அவற்றை நம்மிடமிருந்து எடுத்துதான் போடும்.

68

விதையும் மரமும்

ஞானமுள்ள பழைய மரம் ஒன்று இருந்தது. அது உயர்ந்து பெரிதாக பல கிளைகளை விட்டிருந்தது. குருவிகள் அதன் பழங்களைத் தின்றன. அணில்கள் அதன் கிளைகளில் ஓடிப் பிடித்து விளையாடின. ஆடு மாடுகளும் மக்களும் அதன் அடர்ந்த, குளிர்ந்த நிழலில் இளைப்பாறினர். மரத்திலிருந்து கொட்டைகள் விழுந்து தரையில் கிடக்கும்.

ஒருநாள் ஒரு கொட்டை பிரமாதமான அந்த மரத்தை நிமிர்ந்து நோக்கிச் சொன்னது: "உன்னைப் பார்த்துப் பொறாமைப்படுகிறேன். நீ வல்லவன், நான் ஒரு கொட்டைதானே. உன்னைப்போல் நானும் மற்றவர்களுக்கு உபயோகமாயிருக்கவேண்டுமே."

"நான் ஒரு கொட்டைதானே என்று சொல்லாதே, நீ கடவுளின் படைப்பு. கடவுள் ஒருபோதும் அவசரப்படாதது போல நீயும் அவசரப் படக்கூடாது. உன்னைப் பொறுமையாய் உருவாக்குவார். நீயும் பொறுமையாய் ஒத்துழைக்க வேண்டும்," என்று பதிலுரைத்தது மரம்.

அந்த நேரத்தில் ஓர் அணில் அந்தக் கொட்டையைத் தூக்கிக் கொண்டு ஓடியது. மற்றொரு அணில் துரத்தியதில் கொட்டை ஆற்றில் விழுந்தது. வெள்ளத்தில் சிக்கிய கொட்டை வெகுதூரம் கொண்டு செல்லப்பட்டது. கொட்டை பயந்தாலும், "நான் பொறுமையாயிருக்க

வேண்டும்; நான் ஒத்துழைக்க வேண்டும்," என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டது.

இறுதியாக ஓரிடத்தில் தரையில் பதிந்தது. சில நாட்கள் தூங்கி விழித்தபோது தலையில் ஒரு முளை இருப்பதை உணர்ந்தது. "இவ்வளவுதானா? அந்தப் பெரிய மரம் எப்படி இருக்கிறது. நான்

ஒரு முளைதான். குட்டி விதையே பொறுமையாயிரு, ஒத்துழை," என்று தன்னைத் தட்டிக் கொடுத்துக் கொண்டது. தண்ணீர் குடித்தது. செடியாகி, மரமாகி, பல ஆண்டுகள் கழித்து மாபெரும் ஞானமுள்ள மரமாயிற்று. அதன் கிளைகளில் குருவிகளும் அணில்களும் குதூகலித்தன. மக்கள் அதன் நிழலில் தங்கினர். இன்று அது அநேகம் கொட்டைகளுக்குப் பொறுமையாயிருக்கவும் ஒத்துழைக்கவும் ஆலோசனை வழங்கி வருகிறது.

வாழ்க்கை மெதுவாக நகருவது. வளருவதற்கு அவசரப்படவோ மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படவோ கூடாது. ஒவ்வொரு நாளும் உங்களை முன்னேற்றிக்கொள்ள ஒரு தருணம். விளையாடுங்கள், படியுங்கள், வேலை ஒன்று கற்றுக்கொள்ளுங்கள். உங்களை மேம்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு நாள் நீங்கள் ஒரு முன்மாதிரியாகவும் பிறருக்குக் கற்பிக்கிறவரும் ஆவீர்கள். வாழ்நாள் முழுவதும் நீங்கள் கொட்டையாக இருக்கப்போவதில்லை.

69

மனமகிழ்ந்த பெருவிரல்

நான்கு விரல்களும் கட்டை விரலைக் கேலி செய்யத் துவங்கின: "உன்னைக் கொஞ்சம் கண்ணாடியில் பாரேன். குண்டா, கட்டையா. எங்களைப் பார், மெலிவாக, உயரமாக ஜாம் ஜாம் என்று இருக்கிறோம்."

கட்டை விரல் சோர்ந்துபோய் அழுதது. தன்னைத் தனிப்படுத்திக் கொண்டு, அமைதியாக, வேலை செய்யாமல் இருந்தது. மற்ற நான்கு விரல்கள் சுறுசுறுப்பாயிருந்தன. துக்ககரமாக அவைகளால் பேனா பிடிக்க முடியவில்லை, உணவை அள்ள முடியவில்லை. தங்கள் முட்டாள்தனத்தை உணர்ந்த விரல்கள் பெருவிரலிடம் சென்று மன்னிப்புக் கோரின. மனமகிழ்ந்த பெருவிரல் வேலை செய்யத் தொடங்கியது. இப்போது யாவரும் ஒருமனதுடன், வெற்றி கரமாக வேலை செய்கின்றனர்.

ஒரு குழுவில் ஒவ்வொரு நபரும் உடல் ரீதியாகவும் மற்றபடியும் வித்தியாசமாக இருப்பர். ஆனால் ஒவ்வொருவரும் வித்தியாசமான திறமை பெற்றவர்கள். ஒருவரையொருவர் கடவுளது படைப்பாக ஏற்றுக்கொண்டு, சமாதானமாக, ஒன்றிணைந்து வேலை செய்ய வேண்டும்.

70

ஒவ்வொரு நாளாக ...

காகம் ஒன்று ஒரு புதரிலிருந்து குச்சி ஒன்றை எடுத்துக் கொண்டிருந்தது. விளையாடிக் கொண்டிருந்தப் பிள்ளைகள், காகம் என்னதான் செய்கிறது என்று கவனித்துப் பார்த்தனர். காகம் ஒரு மரத்துக்குப் பறந்துச் சென்று மறுபடியும் புதருக்கு குச்சியை உருவ வந்தது. சில நாட்களாக இது நடந்தது, சில நாட்களுக்குப் பிறகு பிள்ளைகள் விளையாட வந்தபோது, காகம், முட்டையிட ஆயத்தமாகக் கூட்டில் அமர்ந்திருப்பதைக் கண்டனர்.

சில வேலைகள் பெரியவையாகத் தோன்றும். கவலைப்படாதீர்கள். வேலையை நிறுத்திவிடலாமா என்று தோன்றும். சிறியதாகத் துவங்கி, தொடர்ந்து செய்துகொண்டே இருங்கள். ஒரு நாள் அது முடிவடையும்போது பெருமிதம் கொள்வீர்கள். ஒவ்வொரு நாளாக வாழுங்கள்.

71

புத்தியற்ற அரசன்

பல்லாண்டுகளுக்கு முன், நடைபயிற்சியில் ஆர்வம் கொண்ட மன்னர் ஒருவர் இருந்தார். தன் தேசம் முழுவதிலும் நடந்து திரிந்தார். மலையேறி பள்ளத்தாக்கில் இறங்கினார். காடுகளிலும் வனாந்தரங் களிலும் நடந்தார். அந்நாட்களில் யாரும் காலணிகள் அணிவதில்லை. ஆகவே மன்னரின் கால்கள் புண்ணாகி இரத்தம் வடியத் துவங்கியது.

இருப்பினும் மன்னருக்கு நடக்கும் ஆசை விட்டபாடில்லை. ஆயிரக்கணக்கான மாடுக ளையும் ஆடுகளையும் கொன்று, தான் நடக்கும் பாதைகளை எல்லாம் அவற்றின் தோலால் மூடச் சொல்லி, தன் பிரதம மந்திரிக்குக் கட்டளை கொடுத்தார். இத்தனை மிருகங்களைக் கொல்ல கவலையுற்ற மந்திரி ஒரு யுக்தி செய்தார். அவர் ஓர் எருதைக் கொன்று அரசனின் கால்களை அதன் தோலினால் மூடினார். மகிழ்வுடன் மன்னன் மறுபடியும் தன் நடைப் பயிற்சியைத் துவங்கினார். அதன் பிறகு மக்களும் காலணி அணியத் துவங்கினர்.

பிறரை மாற்றுவதைவிட நம்மை மாற்றிக் கொள்வது சுலபம்.

72

பிங்கோ

பிங்கோ ஒரு யானைக் குட்டி. காட்டில் பிடிக்கப்பட்ட அது ஒரு கோவிலுக்குக் கொண்டுவரப்பட்டது. காலில் இரும்புச் சங்கிலி போட்டு அதை ஒரு மரத்தில் கட்டி வைத்தனர். பிங்கோ துக்கமானது. காலை உதைத்துச் சங்கிலியை அறுக்க முயற்சித்தும் கூடாமல் போனது.

ஒவ்வொரு நாளும் சிரமப்பட்டது. கொஞ்ச நேரம் அதை அலைய விட்டுப் பின்பு கட்டிவிடுவர். பிங்கோவுக்கு அது வெறுப்பூட்டும். ஓர் ஆண்டு, இரண்டாண்டு அது தினமும் முயற்சி செய்து இறுதியில் விடுதலை பெறும் எண்ணத்தைக் கைவிட்டது

பிங்கோ வளர்ந்து ஆறு வயதான பிரம்மாண்டமான யானையானது. ஒரு நாள் ஒரு குருவி அதன் தலையில் உட்கார்ந்து சொன்னது: "பிங்கோ, நீ எத்தனை பலசாலி; நீ சங்கிலியை அறுத்து விடுதலையாகலாமே." பிங்கோ சொன்னது: "என்னால் முடியாது. நான் எவ்வளவோ முயற்சித்தும் என்னால் முடியாமல் போனது. இப்போது இது என் தலைவிதி என்று ஏற்றுக்கொண்டிருக்கிறேன்." "இல்லை பிங்கோ, அது பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. இப்போ நீ பெரியவனாகி விட்டாய். நீ பலசாலி. உன்னால் முடியும், முயற்சி செய்," என்றது குருவி. பிங்கோவிற்குக் கொஞ்சம் நம்பிக்கை வந்தது. ஒருமுறை, இரண்டுமுறை, மூன்று முறை முயற்சித்தது. அடி சக்கை! சங்கிலி தெறித்தது. பிங்கோ காட்டிற்கும் தனது விடுதலைக்கும் ஓடி மறைந்தது.

முயற்சியைக் கைவிடாதீர்கள். தீய பழக்கங்களாகவோ பாவமாகவோ உங்களை நெருக்கும் சூழ்நிலைகளோ எதுவாயிருந்தாலும் சரி, முயற்சி செய்துகொண்டே இருப்பீர்களானால் நிச்சயம் ஒரு நாள் விடுதலை பெறுவீர்கள்.

73

எறும்புப் புற்று

எறும்புகள் புற்று கட்டுவதைக் காகம் ஒன்று கவனித்தது. "நீங்கள் எத்தனை சிறியவர். பெரிய புற்றை எப்படிக் கட்டப்போகிறீர்கள்?" என்று கேலி செய்தது. எறும்புகள் அமைதியாக வேலை செய்தன. சில

நாட்களில் மூன்றடி உயரமான புற்றுக்குள் எறும்புகள் குடிபுகுந்தன. வியந்து போன காகம், "எப்படி உங்களால் முடிந்தது?" என்று வினவியது. "தலைகளையும் கரங்களையும் ஒன்று சேர்த்தோம்," என்றன எறும்புகள்.

ஒன்றிணைந்து செயல்படுவோமானால் தனியாகச் சாதிப்பதைவிடக் கூடுதலாகச் சாதிக்கலாம்.

74

கிட்டார் படிப்பு

மாணிக்கமும் செல்வமும் கிட்டார் வகுப்புகளில் சேர்ந்தனர். இருவரும் உற்சாகமாகப் பயிலத் துவங்கினர். கிட்டார் ஆசிரியர் கற்றுக் கொடுத்து, வீட்டுப் பாடமும் கொடுப்பார். வீட்டிற்குச் சென்று கற்றவற்றைப் போட்டுப் பழகும்படியாக அறிவுறுத்துவார்.

மாணிக்கம் வீட்டிற்கு வந்துவிட்டுப் பின்னர் மைதானத்திற்கு விளையாடச் செல்வான். அடுத்து கைகால் கழுவிவிட்டு படிக்க உட்காருவான். இரவு உணவிற்குப் பின்னர் கிட்டார் பாடங்களைப் பழகுவான். செல்வமும் அப்படித்தான்; ஆனால் இரவு சாப்பிட்டு விட்டு TV பார்ப்பான். பெற்றோர் அவனைக் கிட்டார் பழகும்படி ஊக்குவித்தாலும் அவனுக்கு TVயை விடுவதற்கு மனமில்லை. ஆசிரியர் மாணிக்கத்தைப் பாராட்டி செல்வத்தைக் கண்டிப்பார்.

ஓராண்டு கழித்து மாணிக்கம் ஆலயப் பாடகர் குழுவில் இணைந்தான்; ஈராண்டுகளில் பள்ளி விழாக்களில் கிட்டார் போட்டான். சிறுவர் அவனைச் சூழ்ந்துகொண்டு அவன் திறம்பட

கிட்டார் போடுவதைக் கண்டு களிப்பர். தான் வீணடித்த நேரங்களை எல்லாம் செல்வம் எண்ணி, கிட்டார் பழகத் துவங்கினான். ஆனால் இரண்டு ஆண்டுகள் வீணாகிவிட்டனவே.

பழக்கம் உங்களைத் திறமைசாலியாக்கும். இசையானாலும் விளையாட்டானாலும் பாடலானாலும் என்னவானாலும் பழகிப் பழகித்தான் சிறப்பெய்த முடியம்.

75

வாயாடி ஆமை

ஆமை ஒன்று குளத்தில் வசித்து வந்தது. அது எப்போதும் தொணதொணத்துக் கொண்டே இருக்கும். தன் நாவை அடக்க முடியாமல் பேசும். கோடை காலத்தில் குளம் வற்றத் துவங்கியது. பாவம் ஆமை, தன்னை யாராவது ஓர் ஏரிக்குக் கொண்டு செல்வார்களா என்று நண்பரைக் கேட்டது.



இறுதியாக இரண்டு கொக்குகள் பரிதாபப்பட்டு அதை ஓர் ஏரிக்கு இடம் மாற்ற ஒப்புக்கொண்டன. இருவரும் தங்கள் அலகுகளால் ஒரு குச்சியின் இரு முனைகளையும் பிடித்துக்கொண்டுப் பறக்கத் திட்டமிட்டன. குச்சியை ஆமை தனது வாயால் கவ்விக்கொள்ள வேண்டும். வானில் இருக்கும்போது ஆமை வாயைத் திறக்கவே கூடாது என்று கொக்குகள் எச்சரித்தன. ஆமையும் ஒத்துழைக்க ஒத்துக்கொண்டது.

குறிப்பிட்ட நாளில் குச்சியைக் கவ்விக்கொண்டு ஆமை தொங்க, இரு கொக்குகளும் அதைத் தூக்கிக்கொண்டு பறந்தன. ஆமை அமைதியாயிருக்க முயற்சித்தும் பதினைந்து நிமிடங்களுக்குமேல் அதனால் தன் நாவை அடக்கமுடியவில்லை. நடுவானில் வாயைத்

திறந்து பேச ஆரம்பித்தது. தொப்பென்று கீழே விழுந்து இறந்து போனது.

அதிகம் பேசுபவர் தொல்லையில் மாட்டிக்கொள்வர். நாவை அடக்கப் பழகுங்கள். யோசித்துப் பேசுங்கள், புத்தியாய்ப் பேசுங்கள்.

76

தவளையும் வண்ணத்துப் பூச்சியும்

குண்டான பெரிய தவளை ஒன்று ஒரு குளத்தில் வசித்து வந்தது. அதற்குத் தின்ன பூச்சிகள் எதுவும் கிடைக்காததால் மிகவும் பசியோடிருந்தது. ஓர் அழகிய வண்ணத்துப்பூச்சி தன் தலைக்குமேல் பறப்பதைக் கண்ட அது பேச்சு கொடுத்தது. நண்பன் கிடைத்த மகிழ்ச்சியில் வண்ணத்துப் பூச்சியும் கதை பேசத் துவங்கியது.

தவளை சொன்னது, “நீ எத்தனை அழகாயிருக்கிறாய்.” வண்ணத்துப் பூச்சி பெருமிதம் கொண்டது. “ஆனால் உன் வண் ணங்கள் தெளிவாய்த் தெரியவில்லையே. கொஞ்சம் அருகில் வருவாயா? ... இன்னும் கொஞ்சம்... சற்றே கொஞ்சம்” என்றது தவளை. வண்ணத்துப் பூச்சி நெருக்கமாய், நெருக் கமாய் வந்தது. திடீரென்று மின்னல்போல் தன் நாக்கை நீட்டி வண்ணத்துப் பூச்சியைப் பிடித்து விழுங்கி விட்டது தவளை. அந்த அழகிய வண் ணத்துப் பூச்சியின் முடிவு அதுவே.

இந்த உலகில் தீயவர் பலர் உண்டு. யாராவது உங்களுக்கு மிக நெருக்கமாக வந்தால், அல்லது உங்களுக்குக் கூசும் வகையில் உங்களைத் தொட்டால் உடனே கத்திக்கொண்டு அங்கிருந்து ஓடிப்போய் பெற்றோரிடம் சொல்லுங்கள். தனிமையான இடங் களுக்குப் போகாதீர்கள். முன்பின் தெரியாதவருடன் எங்கும் செல்லாதீர்கள். சந்தேகத்துக்குரியவர் எவரையேனும் கண்டால்

அருகிலுள்ள ஒரு பெரிய கடைக்குள் ஓடி விடுங்கள், அல்லது ஒரு கூட்டத்தைச் சேர்ந்துகொள்ளுங்கள். பெரியவர் ஒருவரிடம் காரியத்தைக் கூறுங்கள்.

77

பறக்கும் யானை

யானை ஒன்று பறவைகள் பறப்பதைக் கவனித்து மதிமயங்கியது. பறப்பதாகக் கனவு காணத் துவங்கியது. அது மிகவும் எளிமையாகத் தெரிந்தது. இறக்கைகளை விரித்து அடிக்கவேண்டியதுதானே என எண்ணியது.

ஒருநாள் காட்டிலிருந்த பெரிய பெரிய இலைகளைப் பறித்து தன் இரண்டு பக்கங்களிலும் கட்டிக் கொண்டது. மலை உச்சிக்குச் சென்று குதித்து இலைகளை அடித்தது. ஐயோ பரிதாபம்! தடால் என்று கீழே விழுந்து எலும்புகளை உடைத்துக் கொண்டது.

கடவுள் உங்களை ஒரு நோக்கத்தோடு படைத்துள்ளார். நீங்கள் தனிச்சிறப்புடையவர்கள். இன்னொருவரைப்போல் இருக்க வேண்டுமென்று ஒருபோதும் முயற்சிக்காதீர்கள். நீங்கள் நீங்களாகவே இருந்து கடவுள் உங்களை அழைத்த நோக்கத்தை நிறைவேற்றுங்கள்.

78

மரமும் புல்லும்

நெட்டை மரமொன்று காற்றில் அழகாக அசைந்தாடியது. அது புல்லைப் பார்த்து, "ஐயோ பாவம், மக்கள் உன்னை மிதிக்கிறார்கள்.

யாரும் உன்னை நசுக்கிவிடலாம். நான் வல்லவன், பலசாலி, யாரும் என்னை அசைக்கக்கூட முடியாது," என்றது.

அந்த இராட்சத மரத்தின் அருகில் நிற்கவும் புல் நாணியது. காற்று வீசத் தொடங்கியது. காற்று புயலாகி பயங்கரமாகத் தாண்டவமாடியது. மரம் வேரோடு சாய்ந்தது. தரையில் கிடந்து தன் நிலையை நொந்து புலம்பிக் கொண்டிருந்தது. புல் கோரமாக ஆடியது. புயலுக்குத் தப்ப ஓடியவர்கள் அதை மிதித்துச் சென்றனர். தரையோடு தரையான புல், "என் கதை முடிந்தது," என்று எண்ணியது.



புயல் ஓய்ந்தது. புல் கண்களைத் திறந்தது. எங்கு பார்த்தாலும் தண்ணீர். தண்ணீரைக் குடித்ததும் தெம்பானது. சூரியன் பிரகாசித்தது. புல் மெதுவாக எழுந்து நின்றது. முன்னைவிட பலமாக உணர்ந்தது.

அடப்பாவமே! புல் தனது நண்பனாகிய இராட்சத மரம் விழுந்து கிடப்பதைக் கண்டு பரிதபித்தது. பாதையை அடைத்துக்கொண்டிருந்த அம்மரத்தை, சிலர் வந்து துண்டு செய்து அகற்றினர். மக்கள் புல்லில் உட்கார்ந்து உண்டு மகிழ்ந்தனர். நான் அற்பனாயிருந்தாலும் பயனுள்ளவனாயிருக்கிறேனே என்று புல் அகமகிழ்ந்தது.

உலகம் கொடூரமானது. மக்கள் உங்களைத் தலையில் குட்டிக் குட்டி, பலவிதங்களில் விடாமல் சிறுமைப்படுத்துவர். வாழ்க்கைப் புயல்கள் உங்களைத் தரைமட்டமாக்கும். ஆனால் உங்கள் இருதயம் துவளவே கூடாது. ஆண்டவர் உங்களுக்குச் சூரிய ஒளி, மழை போன்ற நல்ல நண்பர்களை அருளுவார். நீங்கள் தைரியமாக எழுந்து நிமிர்ந்து நிற்கவேண்டும். கடவுள் உங்களைப் பயனுள்ள பாத்திரமாக்குவார்.

79

பேராசை பிடித்த பசு

பசு ஒன்று வரப்பில் மேய்ந்து கொண்டிருந்தது. சற்று தூரத்தில் மற்றொரு வரப்பு இருந்தது. பசுவிற்கு அது இன்னும் பச்சையாகத் தெரிந்தது. ஆகவே சிரமப்பட்டு வேலிகளையும் ஓடைகளையும் தாண்டி அக்கரையை அடைந்தது. அங்கே சென்றவுடன் திரும்பி தன் பழைய இடத்தை நோக்கியது. என்ன ஆச்சரியம்! இப்போது அதன் பழைய வரப்பு, அது நிற்கும் வரப்பைவிடப் பச்சையாகத் தெரிந்தது.

பேராசை கொள்ளாதீர்கள். உங்கள் நிலையிலிருந்து உங்கள் வரங்களை மேம்படுத்துங்கள். இதுவே உங்களுக்கு ஏற்ற இடம்.

80

பலம்

ஆசிரியர் ஒருவர் தனது மாணவர்களுக்கு ஆளுக்கொரு குச்சியைக் கொடுத்து உடைக்கச் சொன்னார். யாவரும் சுலபமாக அதைச் செய்தனர்.



பிறகு ஆசிரியர் சில குச்சிகளை ஒரு கட்டாகக் கட்டி, அதை ஒவ்வொரு மாணவனையும் உடைக்கச் சொன்னார். யாவரும் தோல்வியடைந்தனர். நல்ல பாடம் கற்றுக்கொண்டனர்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. பிரிவினைகளைத் தவிர்க்க முழு முயற்சி எடுங்கள்.

81

நண்டு

தாய் நண்டு தன் மகன் பக்கவாட்டில் நடப்பதைக் கண்டு திட்டியது: "நேராக நட. ஏன் கோணலாக நடக்கிறாய்?" மகனும் முயற்சித்தான். ஆனால் முடியவில்லை.



மகன் தாயைக் கேட்டான், "அம்மா, எனக்கு நேராக நடப்பதெப்படி என்று நடந்து காட்டுவீர்களா?" தாய் நண்டு முயற்சித்தது; ஆனால் தோல்வியடைந்தது. அவளும் பக்கவாட்டில்தான் நடந்தாள். அப்போதுதான் தன் மகன் தன்னிடமிருந்தே நடக்கக் கற்றுக்கொண்டான் என்று தாய் உணர்ந்தாள்.

மற்றவர்கள் உங்களிடமிருந்து கற்றுக்கொள்ளும்படியாக அவர்களுக்கு நல்ல முன்மாதிரியாயிருங்கள்.

82

பேராசை கொண்ட கருமி

பேராசை கொண்ட கருமி ஒருவன் வயல் வழியே நடந்து சென்றான். முப்பது தங்கக் காசுகளை வைத்திருந்த தனது பர்ஸ் காணவில்லை என்பதைத் திடீரென்று உணர்ந்தான். பர்சை கண்டுபிடிக்கத் திரும்பி நடந்தான். ஒரு குடியானவன் வயலில் வேலை செய்துகொண்டிருப்பதைக் கண்டு அவரிடம் விசாரித்தான். அந்த நேரம் அவரது மகள் ஓடிவந்து, "அப்பா, இந்தப் பர்சை வயலில் கண்டெடுத்தேன். யாருது அப்பா, பாருங்கள்," என்றாள்.

குடியானவன் பர்சை அம்மனிதனிடம் ஒப்படைத்தார். அவன் பர்சைச் சரிபார்த்தான். அந்தக் குடியானவனிடம் பணம் கறக்க

எண்ணிய கருமி, "பர்சில் நாற்பது தங்க நாணயங்கள் இருந்தன. பத்து நாண யங்கள் என்ன ஆயின?" என்றான்.

அந்த ஏழை மனிதனை நீதிமன்றத் திற்கு இழுத்துச் சென்றான். கரு மியின் தீயகுணத்தைக் கண்ட நீதிபதி, "உன் பர்சில் நாற்பது காசுகள் இருந்தன. ஆகவே இது உன் பர்சு அல்ல," என்று சொல்லி பர்சை குடியா னவனிடமே கொடுத்துவிட்டார்.

பேராசை துன்பத்தையே விளைவிக்கும்.

83

மந்திரப் பந்து

யாவரும் திருப்தியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்த ஒரு கிராமத்தில் இடையன் ஒருவன் இருந்தான். ஒரு நாள் அச்சிறுவன் மந்தை மேய்க்கையில் ஒரு மந்திரப் பந்தைக் கண்டெடுத்தான். யாருக்கானாலும் அது ஒரு ஆசையை நிறைவேற்ற வல்லது என்று அதில் எழுதப்பட்டிருந்தது.



சிறுவன் அப்பந்தை மக்க ளிடம் காட்டினான். மக்கள் பெருமகிழ்ச்சி கொண்டனர். ஒரு மனிதன் பங்களா கேட்டு அதைப் பெற்றுக்கொண்டான். மற்றொருவன் நல்ல ஆடைகள் கேட்டு ஏராளமாகப் பெற்றுக்கொண்டான். வேறொருவன் நகைகளையும் இன்னொருவன் மந்தையையும் பெற்றுக்கொண்டனர்.

சிலகாலம் யாவரும் களிப்பில் ஆழ்ந்திருந்தனர். சீக்கிரமே பங்களாவில் வாழ்ந்தவன் தன் பக்கத்து வீட்டுக்காரனது உடைகளைக் கண்டு வயிறு எரிந்தான். ஆடைகள் உடையவனுக்கு நகை ஆசை பிடித்தது. நகைக்காரன் மந்தையைக் கேட்டோமில்லையே என நொந்துகொண்டான். முறுமுறுப்பும் பொறாமையும் கடுப்பும் சண்டையும் கிராமத்தை ஆட்டிப் படைத்தன. துக்கமடைந்த சிறுவன் தன் கிராமம் பழைய நிலைக்கு வரவேண்டும் என்று பந்திடம் வேண்டிக் கொண்டான். இப்போது யாவரும் எப்போதும்போல் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

வாழ்க்கை என்பது நமது சொத்தோ பொருட்களோ அல்ல. அது அன்பு, சமாதானம், சந்தோஷம்.

84

முட்செடியும் ஆலமரமும்

முட்செடி ஒன்று ஆலமரத்தின் மீது பொறாமை கொண்டது. "நான் தனிமையில் வாடுகிறேன். உனக்கோ அநேக நண்பர். மக்களும் மந்தைகளும் உன்னிடம் வருகின்றனர். குருவிகளும் அணில்களும் உன்னுடன் விளையாடுகின்றனர். நானோ இங்கு தனித்திருக்கிறேன்," என்று அழுதது.

ஆலமரம் சொன்னது, "நான் அவர்களுக்கு நல்ல நிழல் தருகிறேன். சாப்பிடப் பழம் தருகிறேன். அதனால்தான் அவர்கள் என்னிடம் வருகின்றனர். நீ என்ன தருகிறாய்? வலிக்க வலிக்க அவர்களைக் குத்துகிறாய். அதனால்தான் யாரும் உன்னிடம் வருவதில்லை."

நிறைய நண்பர்கள் வேண்டுமா? தாராளமாகவும் அன்பாகவும் நடந்துகொள்ளுங்கள். நமது வார்த்தையினாலும் நடத்தையினாலும் மக்களைப் புண்படுத்துவோமானால் அவர்கள் நம்மைக் கண்டாலே அடுத்தப் பக்கமாக ஓடுவர். தனிமைதான் நமது நிலையாகிவிடும்.

85

பெருமை கொண்ட பேனா

பெருமை கொண்ட பேனா ஒன்று தன் மூடியைக் குற்றஞ்சாட்டி, "உனக்கு வேறு வேலை கிடையாது. என் தலையில் உட்காருவதுதான் உன் வேலை. என்னைப் பார், எத்தனை அழகாக எழுதுகிறேன்," என்றது.



அதற்குப் பாடம் கற்பிக்க எண்ணி, சில நாட்கள் மூடி ஒளிந்து கொண்டது. பேனா காய்ந்து போனது. அதற்குப் புத்தி வந்தது. வந்து தன்னைக் காப்பாற்றும்படி மூடியைக் கூவி அழைத்தது. மூடி மன்னித்து மறுபடி பேனாவை மூடிக்கொண்டதால் பேனா குப்பைத் தொட்டிக்குப் போகாமல் பிழைத்தது.

அடுத்தவர்கள் எத்தனை அற்பமானவர்களாகத் தெரிந்தாலும், இவ்வுலகில் நாம் ஒருவருக்கொருவர் தேவை என்பதை மறந்துவிடக் கூடாது. மற்றவர்களிடம் மரியாதையுடனும் நன்றியுடனும் நடக்கப் பழகுவோம்.

86

பேனாவும் பென்சிலும்

பென்சிலுக்காகப் பேனா கவலைப்பட்டு, கரிசனையுடன் கேட்டது, "நீ எழுதும்போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டையாகிக் கொண்டே போவதைக் குறித்துக் கவலைப்படுவதில்லையா?"



பென்சில் அழகிய படங்களை வரைந்து கொண்டிருந்தது. அது சொன்னது, "உண்மைதான். யாராவது என்னை எடுத்து எழுதினால், வரைந்தால் நான் என் கல்லறைக்கு அருகே செல்கிறேன் என்று ஆரம்பத்தில் கவலைப்பட்டேன்தான். ஆனால் இப்போது நான் எழுதியவற்றையும் வரைந்தவற்றையும் காண்கிறேன். என் வாழ்க்கையை பயனுள்ளதாகக் கழிக்கிறேன் என்று உவகை கொள்ளுகிறேன்."

கடவுள் கொடுத்தது ஒரு வாழ்க்கை. நாம் இறக்குமுன் அதைச் சிறப்பாகப் பயன்படுத்திவிட வேண்டும்.

87

பன்றியும் ஆடும்

ஒரு பன்றியையும் ஓர் ஆட்டையும் அதன் சொந்தக்காரர் தன் பண்ணைக்கு அழைத்துச் சென்றுகொண்டிருந்தார். ஆடு அமைதியாகச் சென்றது; பன்றியோ உறுமிக்கொண்டும் அழுது கொண்டும் முரண்டு பிடித்துக் கொண்டும் சென்றது.



"ஒன்றுமில்லாததற்கு ஏன் இப்படி ரகளை செய்கிறாய்? பண்ணைக்குத்தானே அழைத்துச் செல்லப்படுகிறோம். சும்மா வாயேன்," என்றது ஆடு. பன்றி சொன்னது, "நீ மயிர்கத்தரிப்பதற்காக அழைத்துச் செல்லப்படுகிறாய்; நானோ அடிக்கப்படுவதற்காகக் கொண்டு செல்லப்படுகிறேன்."

மற்றவர்களுடைய உணர்வுகளையும் பதற்றங்களையும் பலமுறை நாம் புரிந்துகொள்ளாமல் பேசிவிடுகிறோம். மற்றவர்கள் இடத்தில் உங்களை வைத்து அவர்களைப் புரிந்துகொள்ள முயலுங்கள்.

88

கரப்பான்கள்

இரண்டு கரப்பான் பூச்சிகள் குப்பைத் தொட்டியில் அழுகி நாற்றமெடுத்தப் பொருட்களைத் தின்றுகொண்டிருந்தன. ஒன்று சொன்னது, "புதிதாக ஊரில் திறக்கப்பட்டிருக்கிற உணவகத்தைச் சென்று பார்த்தாயா? அடுப்பறைத் தரையில் உன் முகத்தைப் பார்க்கலாம். சுவர்களெல்லாம் பளிங்குபோல், நீ நடந்தால் கூட வழுக்கிவிழும் அளவு சுத்தமாகவுள்ளது. வாசனைத் திராவகம் அடித்திருப்பதால் அறையெங்கும் சந்தன மணம் கமழுகிறது. "போதும், போதும், நிறுத்து. சாப்பிடும்போது அசுத்தமானவைகளைப் பேசாதே," என்றது இரண்டாம் பூச்சி.

உலகில் மூழ்கியிருப்போமானால் வேத வசனத்தை அசட்டை செய்வதோடல்லாமல் அதை வெறுக்கவும் துவங்குவோம். உலக ஆசை யை விடுவோமானால் திருவசனமே நமது மனமகிழ்ச்சியாகும்.

89

காகங்களும் புறாவும்

புறாக் குடும்பம் ஒன்று ஒரு மரத்தில் வசித்து வந்தது. பமிலா புறாவுக்கு குடும்பத்தின் சட்டதிட்டங்கள்மேல் வெறுப்பு தட்டியது. இருபதுபேர் கொண்ட அந்தக் குடும்பம் ஒன்றாகவே பறந்து சென்று ஒழுக்கமாக வாழ்ந்தன. ஆபத்தான இடங்களைத் தவிர்த்தன. குறும்புக்கார பமிலாவிற்குக் கட்டுப்பாடுகள் என்றாலே வெறுப்பு. காக்கா கூட்டமொன்று கண்டவிடமெல்லாம் அலைந்து, கண்டதை யெல்லாம் தின்பதைக் கண்டது. பமிலா அவர்களுடன் நட்பு கொண்டு, குடும்பத்தின் எச்சரிப்பை அல்லத்தட்டி, அவர்களோடேயே சுற்றியது. காக்கைளோடு பறந்து ஒரு வயலுக்குச் சென்று அங்கு வேடனொ ருவன் விரித்திருந்த வலையில் சிக்கிக்கொண்டது. "ஆலோசனையை வெறுத்தேனே. அறிவுரையைக் கேட்காமல் போனேனே. பெரிய வர்களை அலட்சியம் செய்தேனே. இப்போது என் வாழ்க்கையை வீணடித்து விட்டேனே," எனப் புலம்பியது.

கெட்டவர்களோடு சேராதே. நல்ல நண்பர்களைக் கவனமாய்த் தேர்ந்தெடு. அறிவுரைகளைக் கேட்டு நட.

90

மரங்களும் சிங்கங்களும்

அடர்ந்த ஒரு காட்டில் பல சிங்கங்கள் வாழ்ந்தன. அவை உலா வரும், உறுமும், மரம் ஏறும், இடத்தை அழுக்காக்கும். கொர்சிக்கும் சத்தத்தினால் தூக்கம் கெட்டுப்போனதால் மரங்களுக்கு சிங்கங் களைப் பிடிக்கவில்லை. அவை மரம் ஏறும்போது அவற்றின் நகங்கள் மரங்களின் சதையைக் கிழித்தன. ஆகவே மரங்கள் முறுமுறுத்து சிங்கங்களை இடத்தைக் காலி செய்யச் சொல்லிக் கொண்டே இருந்தன.



நிம்மதியை நாடின சிங்கங்கள் பக்கத்து வனத்திற்கு இடம் பெயர்ந்தன. மரங்கள் குஷியாக அப்பாடா என்று பெருமூச்சு விட்டன. ஆனால் இப்போது சிங்க பயம் இல்லாததால் பக்கத்துக் கிராம மக்கள் வந்து விறகிற்காக மரங்களை வெட்டிச் சென்றனர்.

வாழ்க்கையில் தொல்லை என்று நாம் நினைக்கும் சில காரியங்கள் உண்மையில் வேடமணிந்து வரும் ஆசீர்வாதங்கள்தான்.

91

செல்ல ஆட்டுக்குட்டி

மிகவும் நம்பிக்கையான ஒரு வேலைக்காரனை உடையவர் பல்வீர். தன் பொறுப்புகளை எல்லாம் கவனித்துக்கொண்டு தனக்கு மன அழுத்தமின்றி பார்த்துக்கொள்ளும் இந்த வேலைக்காரனுக்காய்த் தினமும் ஆண்டவருக்கு நன்றி சொல்லுவார்.

அவரது பக்கத்து வீட்டுக்காரர் ஒரு நீதிபதி. அவருக்குப் பல வேலைக்காரர் இருந்தனர். ஆனால் பல்வீரின் உத்தம ஊழியன்மேல் அவருக்கு ஒரு கண் இருந்தது. அந்த ஊழியனிடம் பேசி, பல ஆதாயங்கள் தருவதாக ஆசைகாட்டி, தன்வசமாய் இழுத்துக் கொண்டார். பல்வீர் மனமுடைந்து போனார்.

பல்வீருக்கு ஜேம்ஸ் என்ற நண்பனுண்டு. நீதிபதியிடம் முறையிடச் சொல்லி ஜேம்சைக் கேட்டுக்கொண்டார். ஜேம்ஸ் நீதிபதியை அணுகி முறையிட்டதாவது: "ஐயா, நான் ஒரு செல்ல ஆட்டுக்குட்டி வைத்திருந்தேன். அது என் வீட்டுக்குள் பிள்ளைகளிடம் விளையாடிக் கொண்டிருக்கும். என் பிள்ளைகள் அதற்குச் சோறு ஊட்டுவார்கள். என் பிள்ளைகளோடே தூங்கும். நாங்கள் பணக்காரர் இல்லா விட்டாலும் மகிழ்ச்சியான குடும்பம். என் பக்கத்து வீட்டு ஜான் பணக்காரன். அவனுக்கு மந்தையும் வயல்களும் தோப்புகளும் உண்டு. ஆனால் அவனுக்கு ஒரு விருந்தாளி வந்தபோது, வெளியே

விளையாடிக் கொண்டிருந்த என் செல்ல ஆட்டுக்குட்டியைப் பிடித்து விருந்து செய்தான்."

நீதிபதி கோபமாக தன் இருக்கையிலிருந்து எழுந்தார். "அந்த மனிதனை அழைத்து வா. அவன் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். அவனைச் சிறைச்சாலையில் அடைப்பேன்" என்று கத்தினார். "ஐயா, நீங்களே அந்த மனிதர்" என்றார் ஜேம்ஸ். நீதிபதி தன் குற்றத்தை உணர்ந்து வேலைக்காரனைத் திருப்பி அளித்தார்.

மற்றவர்களைக் குற்றம் சாட்டுமுன் நம்மையே நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். மற்றவரது கண்களில் உள்ள தூசியை அகற்று முன்பாக, மற்றவர்களுக்கு உதவி செய்ய நமது கண் தெளிவடையும் படியாக முதலாவது நமது கண்ணிலுள்ள விறகுக் கட்டையை அகற்ற வேண்டும். பிறருக்குரிய எதையும் நாம் ஆசைப்படக்கூடாது.

92

ஒரு சிறு மீன்

மணல் திட்டில் கடல் அலைகள் பாய்ந்து மறுபக்கம் வடிவதை ஒரு சிறுவன் கவனித்துக் கொண்டிருந்தான். பல சிறு மீன்களை அது உயிருக்குப் போராட துள்ளித் தவிக்க விட்டுச் சென்றது. பரிதாபப் பட்ட அவன் அவற்றை ஒவ்வொன்றாகப் பொறுக்கி, கடலில் விட்டு, அவைகள் களிப்பாய் அலைகள் மத்தியில் வாலாட்டி ஓடுவதைக் கண்டு உற்சாகங் கொண்டான்.



பையனைக் கவனித்துக் கொண்டிருந்த ஒருவர், "கடற்கரை நெடுகே பல மீன்கள் சாகின்றன. சிலவற்றைக் காப்பாற்றுவதால் என்ன

மாற்றம் வந்துவிடப்போகிறது?" என்று கேட்டார். தன் கையிலிருந்த குட்டி மீனைப் பார்த்துக்கொண்டே சிறுவன் பதிலளித்தான், "ஆனால் இந்த ஒரு குட்டி மீனுக்கு மாற்றம்தானே!"

உலகமெங்கும் வேதனைகளும் துக்கங்களும் உண்டு. அதைக் கண்டு மலைத்து நாம் வாளாவிலிருந்துவிடக் கூடாது. நம் இடத்தில் நம்மால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யவேண்டும். சிறு துளி பெரு வெள்ளம். சின்ன காரியங்களில் உண்மையாயிருப்போமென்றால் கடவுள் நமக்குப் பெரிய பொறுப்புகளைத் தருவார்.

93

பனித்துளிகள்

தடித்துக் கொழுத்துப் போன ஒருவர் இருந்தார். எடையைக் குறைக்க மருத்துவரிடம் சென்றார். தினமும் காலை ஐம்பது பனித்துளிகளை உண்ணுமாறு ஆலோசனை பெற்றார். பனித் துளிகளை அவரே சேகரிக்க வேண்டும். ஒரு துளி எடுத்தவுடன் நேராக நிமிர்ந்து நின்று வாயில் போடவேண்டும்.



மிகவும் சுலபம்தானே என்று அவர் வீட்டிற்கு வந்தார். மறுநாள் காலை தோட்டத்திற்குச் சென்று மருத்துவர் சொன்னபடியே ஒவ்வொரு பனித்துளியையும் எடுத்தவுடன் நின்று வாயில் போட்டார். சில மாதங்களில் எடை குறைந்தது. எடுப்பாக உணர்ந்த அவர் மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் அடைந்தார்.

தன் எடையைக் குறைக்க பனியில் இருந்த மருந்து என்ன என்று அவர் மருத்துவரைக் கேட்டார். மருத்துவர் சொன்னார், "பனித் துளியில் ஒன்றுமில்லை, உட்கார்ந்து எழுந்த உடற்பயிற்சியே உங்கள் எடையை குறைத்தது."

இப்போதெல்லாம் பிள்ளைகள் ஓடி, குதித்து விளையாடுவதற்குப் பதிலாக TVக்கும் கணினி விளையாட்டுகளுக்கும் அடிமையாகி விடுகின்றனர். எடை கூடுவதற்கு இது முக்கியக் காரணம். நன்றாக ஓடி விளையாடுங்கள். சாயங்காலங்களில் திறந்த வெளியில்

சுறுசுறுப்பான விளையாட்டுகள் விளையாடுங்கள். வீட்டிலும் பாத்திரம் தேய்ப்பது, கூட்டுவது, தண்ணீர் நிரப்புவது, சாப்பிடும்முன் மேசையைச் சரிசெய்வது, சாப்பிட்டபின் சுத்தம் செய்வது போன்ற சில வேலைகளைச் செய்யலாம். இது உங்களை மெல்லியதாகவும் கட்டுக்கோப்பாகவும் வைக்கும்.

94

அரசனின் வால்

அரசர் ஒருவர் தன் மந்திரிகளும் மக்களும் புறணி பேசுவதாகச் சந்தேகப்பட்டார். இதை உறுதி செய்வதற்காக தன் முதல் மந்திரியை அழைத்து இரகசியமாக அவர் காதில், "எனக்கு விரலளவு வால் முளைத்திருக்கிறது. யாரிடமும் சொல்லிவிடாதீர்கள்," என்றார்.

முதல் மந்திரி மற்ற மந்திரிகளை அழைத்து, "மன்னருக்கு கையளவு வால் முளைத்திருக்கிறது. யாரிடமும் சொல்லிவிடாதீர்கள்," என்றார். அவர்கள் மக்களிடம் மன்னருக்கு முழங்கை அளவு வால் முளைத்திருப்பதாகக் கூறினர். அரசியின் தோழிகள் அரசியிடம் வந்து, "என்னம்மா இது? அரசருக்கு கரமளவு வால் இருக்கிறதாமே அப்படியா?" என்று கேட்டனர். அரசர் காதுக்கு இச்செய்தி வந்ததும் தன் மக்கள் எவ்வளவு கட்டுக்கதை பேசுகிறவர்கள் என்பதைப் புரிந்து கொண்டார்.

மக்கள் புரளி பேசுவதை நாம் தடுக்கமுடியாது. ஆனால் யாரும் நம்மைக் குறித்துப் புரளி பேசக்கூடாத வாழ்க்கை வாழலாம்.

95

பொன் வீடு

உற்சாகமாக சைக்கிள் ஓட்டும் பத்து வயது சிறுவன் நரேஷ். சாயங்காலங்களில் பல கிலோ மீட்டர்கள் சைக்கிளில் செல்வான். ஒருநாள் வழக்கம்போல சைக்கிளில் ஊரைவிட்டு வெளியே சென்றான். என்ன அதிசயம்! பச்சை வயல்களின் நடுவே கதிர் வீசி ஜொலித்துக்கொண்டிருந்த ஒரு தங்க வீட்டைக் கண்டான். அதிலிருந்து தங்கக் கதிர்கள் சுற்றிலும் தெறித்தன. நரேஷ் கண்களுக்கு விருந்தான அந்தப் பொன் வீட்டை அருகில் சென்று காண வேகவேகமாக சைக்கிளை மிதித்தான். பக்கத்தில் வந்ததும், அட! அது கண்ணாடி மேற்கூரை கொண்ட ஒரு சாதா வீடு! சூரியனின் கதிர்கள் கண்ணாடியில் பட்டுத் தெறித்து தங்கம் போல் காட்சியளித்தது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல! இவ்வுலகில் பல காரியங்கள், உறவுகள், சந்தர்ப்பங்கள் பொன்னைப்போல் மின்னும். அருகில் சென்று, ஆராய்ந்து, ஜெபித்துத் தீர்மானிக்காமல் எதையும் தெரிந்தெடுக்கக் கூடாது. ஏமாந்து போகாதீர்கள்.

96

உண்மை நண்பன்

ரூபனும் சாம்சனும் நெருங்கிய நண்பர்கள். ஞாயிறுதோறும் ஆலயம் முடிந்தவுடன் இருவரும் இருவரில் ஒருவர் வீட்டுக்குச் செல்வார்கள். இருவரும் பத்தாம் வகுப்பில் இருந்தனர்.

ஒருநாள் ஆராதனை முடிந்தவுடன் சாம்சன் கிரிக்கெட் போட்டி பார்க்கப் போவதாகக் கூறினான். ரூபன் தானும் வருவதாகக் கூறியபோது அவன் வேறு நண்பர்களுடன் செல்வதாகக் கூறினான். ரூபன் ஏமாற்றமடைந்தாலும் பொறாமைப்பட விரும்பவில்லை. அவ்வப்போது சாம்சன் 'மற்ற நண்பர்களுடன்' போகத் துவங்கினான்.

சாம்சன் ஒருமுறை ரூபனைத் தன்னோடு சினிமா பார்க்கக் கூப்பிட்டபோது ரூபன் திடுக்கிட்டான். அவர்கள் ஒருபோதும் சினிமா போனதில்லை. சாம்சன் புதிய பழக்கங்களைப் பழகுகிறான், அவனது நண்பர்கள் சரியானவர்கள் அல்ல என்பதை ரூபன் புரிந்து கொண்டான். சாம்சன் அதிகமாகச் செலவழிப்பதையும் கவனித்தான். அதைக் குறித்து வினவியபோது பெற்றோருக்குத் தெரியாமல் அலமாரியிலிருந்து பணம் எடுப்பதாகக் கூறினான். ரூபன் கண்டித்து, சாம்சனது அப்பாவிடம், அவனது நன்மைக்காகவே கூறப்போவதாக பயமுறுத்தினான். சாம்சனின் அப்பாவிடம் சொல்லியும் விட்டதால் அவர் சாம்சனைத் திட்டி பணத்தைப் பூட்டி வைக்கத் துவங்கினார். இருவரது நட்பும் முறிந்தது.

ஒரு சனிக்கிழமை சாயங்காலம் ரூபன் கிரிக்கெட் விளையாட மைதானத்திற்குச் சென்றான். அங்கு ஒரு மரத்தடியில் சில பையன்கள் குடிப்பதும் சூதாடுவதுமாக இருந்தனர். அவனுக்கு அதிர்ச்சியூட்டியது என்னவென்றால் அங்கே சாம்சன் புகைபிடித்துக் கொண்டிருந்தது தான். சாம்சனின் சட்டைக் காலரைப் பிடித்திழுத்த ரூபன், ஒரு அறைவிட்டு, “உனக்கு இங்கென்ன வேலை. உன் பெற்றோர் உன்னை நம்பி, உனக்குப் பள்ளிக்குப் பணம் கட்டி, எவ்வளவு நேசிக்கிறார்கள். நீயோ அவர்களை ஏமாற்றுகிறாய்” என்றான். அவனது நண்பர் களுக்குக் கோபம் வந்து ரூபனை அடித்து விரட்டிவிட்டனர்.

ரூபன் துக்கத்தோடு அவனது நண்பனுக்காக ஜெபிக்கத் துவங்கினான். துக்ககரமாக, சாம்சனையும் அவனது நண்பர்களையும் சூதாடினதற்காக போலீஸ் பிடித்தனர். அவரவர் வீடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பெற்றோர் முன்னிலையில் எச்சரிக்கப்பட்டு, இனியும் சூதாடினால் சிறைக்குச் செல்ல நேடும் என்று மிரட்டி விடுவிக்கப்பட்டனர். சாம்சன் பத்தாம் வகுப்பில் தோல்வியுற்றாலும் நல்ல பாடத்தைக் கற்றுக்கொண்டான்.

உண்மை நண்பர்கள் உங்களைத் திருத்துவர், கண்டிப்பர், எச்சரிப்பர். அது வேதனை அளித்தாலும் அவர்கள் சொல்வதைக் கேளுங்கள், நட்பை முறித்துவிடாதிருங்கள். அப்படியானால் உங்கள் வாழ்க்கை பிரகாசமாயிருக்கும். தவறான நண்பர் உங்களைத் தவறான பாதையில் இழுத்துச் செல்வர்.

97

ரயில் பெட்டியில் பாம்பு

ஒருவன் ரயில் ஏறினான். அப்பெட்டியில் கூட்டம் நிறைந்திருந்ததால் அவனுக்கு உட்கார இடமில்லை. இந்தத் தந்திரக்கார மனிதன் ஒரு திட்டம் தீட்டினான். தனது பெட்டியைக் கீழே வைக்கக் குனிந்தவன் “ஐயோ பாம்பு, ஐயையோ பாம்பு,” என்று அலறத் தொடங்கினான். மக்கள் அங்கும் இங்கும் அலை மோதி பெட்டிக்கு வெளியே குதித்தனர். அப்பாடா என்று அம்மனிதன் காலை நீட்டிப் படுத்துத் தூங்கிவிட்டான்.

அரைமணி நேரம் கழித்து விழித்தவன் தான் இன்னும் அதே ரயில் நிலையத்தில் இருப்பதைக் கண்டான். கவைதூக்கி ஒருவன், பாம்பு இருந்ததால் அப்பெட்டியைக் கழற்றி விட்டு ரயில் போய் விட்டது என்றான்!

தந்திரம் என்பது பிசாசின் குணம். நேர்மையான வெளிப் படையான மனிதராயிருங்கள்.

98

தண்ணீரும் வெந்நீரும்

கிராமத்தினன் ஒருவன் பட்டணத்திற்குச் சென்று ஹோட்டலில் தங்கினான். குளியலறையிலிருந்த இரண்டு குழாய்களில் "ஹாட்" "கோல்டு" என்று எழுதியிருக்கக் கண்டான். "ஹாட்" குழாயைத் திறந்தால் வெந்நீர் வந்தது. "கோல்டு" குழாயைத் திறந்தால் குளிர் நீர் வந்தது. அவனுக்குத் தலைகால் புரியவில்லை. உடனே கடைக்குப் போய் "ஹாட்" "கோல்டு" என்ற குழாய்களை வாங்கினான்.



வீட்டுக்கு வந்து மனைவியிடம் சொன்னான், "பார், பார், உனக்கு என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன் பார். இந்தக் குழாய்களை குளியலறையில் பொருத்துவேன். நீ "ஹாட்" குழாயைத் திறந்தால் வெந்நீர் வரும்; "கோல்டு" குழாயைத் திறந்தால் குளிர்ந்த நீர் வரும்." அவர்களது ஏமாற்றத்தை வருணிக்கவும் வேண்டுமோ?

ஆண்டவரது ஆசீர்வாதங்களை ஒரு சுடக்கு விட்டுப் பெற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறோம். அதற்குப் பின்னால் எவ்வளவு இருக்கிறது! “ஆசீர்வாதக்” குழாயைத் திறக்குமுன்பாக நாம் அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும், அவரது திருச்சித்தப்படி நடக்க வேண்டும், அவரை எல்லா நிலையிலும் மகிழ்விக்க வேண்டும்.

99

கருமி

கருமி ஒருவன் ஒரு குருவிடம் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கச் சென்றான். அவன் நிலங்களையும், பங்களாக்களையும் வங்கி கணக்குகளையும் உடையவன். குருவானவர் அவனிடம் ஒரு குண்டூசியைக் கொடுத்து அதைப் பரலோகத்திற்கு வரும்போது தன்னிடம் திருப்பி அளிக்கக் கேட்டார்.

குழம்பிப்போன கருமி ஒரு குண்டூசியை பரலோகத்திற்கு எடுத்துச் செல்ல முடியாதே என்றான். குருவானவர் கேட்டார், “ஒரு குண்டூசியைக் கூட பரலோகத்திற்கு எடுத்துச் செல்ல முடியாத நீ ஏன் இவ்வளவு சேர்த்து வைத்திருக்கிறாய்?” புத்தி தெளிந்த கருமி, தயாளனானான்.

நாம் இவ்வுலகிற்கு ஒன்றும் கொண்டுவரவுமில்லை, இவ்வுலகத்திலிருந்து ஒன்றும் கொண்டுபோவதுமில்லை. தேவனுக்காய்ச் செலவாளிகளாவோம்!

100

அயலாரை ஆசீர்வதியுங்கள்!

விவசாயி ஒருவர் "சிறந்த விவசாயி" பரிசை ஆட்சியரிடமிருந்து பெற்றார். அந்த விழாவின் போது, தனது துறையில் அவர் எப்படி சிறப்பெய்தினார் என்றும், ஏன் தன் அண்டை நிலத்தாருக்குத் தரமான விதைகள் பகிர்ந்தளித்தார் என்றும் விளக்கும்படி ஆட்சியர் கேட்டுக் கொண்டனர்.

விவசாயி எழுந்து நின்று விளக்கினார்: "காற்று மற்றும் பறவைகள் மூலமாக மகரந்தப் பகிர்வு ஏற்படுகிறது. என் அயலார் நிலங்களில் தரமான பயிர்கள் விளையாவிடில் என்னுடைய பயிர்களுக்குத் தரமான மகரந்தம் கிடைக்காது. எனவேதான் தரமான விதைகளை என் பக்கத்து நில விவசாயிகளுக்கும் பரிசளிக்கிறேன்."

அயலாருக்கு நன்மை செய்தால் அதன் பலனை நாம் அறுவடை செய்வோம்.

ஆசிரியரது பிற நூல்கள்—

1. அவள் தீர்மானங்கள்
2. இயேசுவின் பின்னே...
3. உலகில் உத்தமி
4. கண்ணீர் துடைப்போர் யார்?
5. கம்பளிப்பூச்சி
6. குட்டி இதயங்கள் குட்டிக் கதைகள் (தொகுப்பு -1)
7. குட்டி இதயங்கள் குட்டிக் கதைகள் (தொகுப்பு -2)
8. குட்டி இதயங்கள் குட்டிக் கதைகள் (தொகுப்பு -3)
9. குடும்பமே குடும்பம்!
10. குதூகலக் கிறிஸ்தவம்
11. சாத்தானுக்கு டாடா
12. தெபொராளே, விழித்தெழு!
13. தேவனே, நான் உமதண்டையில்...
14. பசங்க...பொண்ணுங்க ...
15. பயனுள்ள பாத்திரம்
16. பறக்கும் பாவையர்
17. பனியைப் போல வெண்மை
18. பகலில் வந்த கனா!
19. 12 பொன் மாதங்கள்
20. மண்ணிலே வெண்ணிலா
21. முன்னேறும் கிறிஸ்தவன்
22. வயது பதினாறிருக்கும்!
23. வாலிப உலகம்
24. ஞானத்தைத் தேடி ...

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet
Chennai 600 002, India
Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>

கிறிஸ்தவ வாழ்வில் மறுமலர்ச்சி பெற
இன்றே வாசியுங்கள்...

ஆசீர்வாதம்

எழுப்புதலுக்கும் நற்செய்திப்பணிக்கும்
அர்ப்பணிக்கப்பட்ட பத்திரிகை!

உங்களை ஆசீர்வதித்து,
உங்களை உங்கள் குடும்பத்திற்கும், சபைக்கும்,
நண்பருக்கும் ஆசீர்வாதமாக்கும் பத்திரிகை!

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி,
தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா ரூ.100/-
ஆயுள் சந்தா ரூ.1000/-

நீங்கள் ஆயுள் சந்தாதாரரானால், பணம் பெற்றுக்கொண்ட நாள் முதல் நாங்கள் வெளியிடும் பத்திரிகையையும், புத்தகங்கள் யாவற்றையும் பதினைந்து ஆண்டுகட்கு இலவசமாக அனுப்பிவைப்போம்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

Blessing Youth Mission
8 Church Colony
Vellore 632 006, India
Tel. 00 91 416 2242943, 2248943
<hq@bymonline.org>
www.bymonline.org

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

எழுப்புதலுக்கும் நற்செய்தியறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு
1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத,
ஒரு திருப்பணி

❒

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❒

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❒

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❒

400க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒடிஷா,
கர்நாடகம், குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், தமிழகம் மற்றும் ஜார்கண்ட்
ஆகிய மாநிலங்களிலுள்ள கவனிப்பாரற்ற கிராமங்களிலும்
ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்.

❒

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒடியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம் ஆகிய
மொழிகளில் *"ஆசீர்வாதம்"* எனும் பத்திரிகை, புத்தகங்கள் மற்றும்
ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❒

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும்
எழுத்தறிவு கற்பித்தல் மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
8 சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி: 00 91 416 2242943, 2248943
<hq@bymonline.org>
www.bymonline.org

குட்டி இதயங்கள் குட்டிக் கதைகள்

கதை கேட்கும் வயது என்றென்றும் நீடிக்காது;
அது சீக்கிரமாய்க் கடந்து போகும்.
மம்மி, கத, மம்மி என்று குழந்தை கெஞ்சும்போது
மம்மிக்குக் கதை தெரியாவிட்டால் குழந்தை கண்டதையும்
கேட்டுக்கொண்டே தூங்கிப்போகும்.
குழந்தைகளுக்கு வாழ்க்கைப் பாடங்களை கற்பிக்க
ஆவலாய் உள்ளவர்களுக்கு வரப்பிரசாதமாக வருகிறது
இந்தக் குட்டிக் கதைகள்!

இப்புத்தகத்தின் ஆசிரியர் குழந்தை நல மருத்துவராயிருந்து
மருத்துவ மிஷனரியாக ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் பணியாற்றியவர்.
இவரது கணவர் R. ஸ்டான்லி, கட்டிடப் பொறியியலராயிருந்து
திருமறைப் போதகராய் மாறியவர்;
இவர் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BYM) நிறுவனர்.
2003இல் இயக்கத்திலிருந்து ஓய்வுபெற்றபின் திருச்சபையின்
நலனுக்காய் உழைத்து வருகின்றனர்.
லில்லியனின் கட்டுரைகள் ஆசீர்வாதம் *(Blessing)* பத்திரிகையில்
அவ்வப்போது வெளிவருகின்றன.

Blessing Youth Mission
Church Colony
Vellore 632 006, India.
Tel: 00 91 416 2242943, 2248943
<hq@bymonline.org>   www.bymonline.org